இலவசப் பிரதி
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின்
யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES
சுப்ப சூஸ்
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-414)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 29 (03.01.2003) வெள்ளிக்கிழமை இதழ் : 94

## குடாநாட்டுக்கு வைரஸ் காய்ச்சல் ஐரோப்பாவிலிருந்து பரவியதா?

### மருத்துவ வட்டாரங்களில் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பரவிவரும் காய்ச்சலுக்கு காரணமான வைரஸ் கிருமி ஐரோப்பிய நாடுகளிடமிருந்து குடாநாட்டுக்குப் பரவியதா என்பது குறித்து தற்போது சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த வருட ஆரம்பத்தில் இருந்து வருடம் முழுவதும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையானவர்கள் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளனர். உயிருள்ள ஊடகம் ஒன்றின் மூலமாகவே மேற்படி வைரஸ் ஒரு இடத்தில் இருந்து வேறு இடங்களுக்கு எடுத்துச் செலப்பட முடியும். அத்துடன், இவ்வாறான ஊடகத்தில் மட்டுமே வைரஸ் உயிருடன் வாழும். மேலும், இது போன்ற வைரஸ் காய்ச்சல் காரணமாக அதிகளவு தொற்றுதலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வைரஸ் காய்ச்சலினால் நேற்று மட்டும் மூவர் பலி

இனந்தெரியாத வைரஸ் தொற்றுக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவர் சிகிச்சை பலனளிக்காது நேற்று மரணமடைந்தனர்.

பளை, அல்லிப்பளையைச் சேர்ந்த செல்லையா இராமலிங்கம் (வயது 87) என்பவர் மூன்று நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு, வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது நேற்று மரணமானார். கடந்த எட்டு நாட்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு அக்கராயன் வைத்தியசாலையில் இருந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கே.தில்லையம்மா (வயது 70) என்பவரும், தொண்டமனாற்றைச் சேர்ந்த வைரமுத்து மகேந்திரராஜா (வயது 47) என்பவரும் இக்காய்ச்சலினால் நேற்று மரணமடைந்தனர். (ச,கி)

# ஊடக யுத்தம் நடத்த வேண்டாம்; ராணுவத்துக்கு ரணில் எச்சரிக்கை!

## சிங்கப்பூரிலிருந்து கொழும்பு வந்ததும் பல மணிநேரம் உயர் மட்டச் சந்திப்பு



(கொழும்பு)

**சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள் மற்றும் உயர் படை அதிகாரிகளுடன் பல மணிநேரம் கலந்துரையாடினார்.**

**இதன்போது, இராணுவ உயர்பீடம், அமைதி முயற்சிகளைப் பாதிக்கும் ஊடக யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும் என்று அவர் கடுமையாக எச்சரிக்கை செய்தார். இக் கூட்டத்தில் பாதுகாப்பு வலயப் பிரச்சினை குறித்தும் ஆராயப்பட்டது.**

இந்தக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மற்றும் முப்படைகளினதும் பிரதம தளபதிகள், வட பகுதி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல மணி நேரமாக நீடித்த இந்தக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- ஊடக யுத்தம் நடத்த வேண்டாம் என இராணுவ உயர் பீடத்துக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்தார்.

சமாதானப் பேச்சுக்கள் நடக்கும் போது ஊடக யுத்தத்தை நடத்த வேண்டாம். அமைதிச்சூழலைப் பேண நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளையில் இன்று உண்ணாவிரதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்குமாறு கோரி இன்று தெல்லிப்பளையில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகிறது.

மேற்படி மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை வலிகாமம் வடக்கு வெகு ஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்தொகையான மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்கு முன்னால் நடைபெறவி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா படக் கலண்டர்களுக்கு முண்டியடிக்கும் படையினர்

தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படம் தாங்கிய நாட்காட்டிகளை, யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கூடுதலான அளவு கொள்வனவு செய்வதைக் காணமுடிகின்றது.

2003ஆம் ஆண்டிற்கான நாட்காட்டிகள் புத்தக, வர்த்தக நிலையங்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. பலவகையான படங்கள் கொண்ட நாட்காட்டிகள் வர்த்தக நிலையங்களில் காணப்படுகின்றபோதும் விடுமுறையில் செல்கின்ற இராணுவத்தினர் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படத்தினைத் தாங்கிய நாட்காட்டிகளையே கொள்வனவு செய்கின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிறன்று புலிகள் புறப்படுவர்

தாய்லாந்துப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கான புலிகள் தரப்புக் குழு ஞாயிறன்று இங்கிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது.

அரச தரப்புக்குழுவில் இடம் பெறும் பேனாட் குணதிலக, ஒஸ்ரின் பெர்ணான்டோ, சாந்த கொட்டேகொட ஆகியோர் நாளை பறப்பட்டுச் செல்லவுள்ளனர். அமைச்சர்மட்டக் குழு ஞாயிறன்று இங்கிருந்து தாய்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன்துறைக் கடற்பரப்பில்

## காணாமற்போன மீனவரைத் தேட கடற்படை நேற்றும் அனுமதி மறுப்பு



காணாமற்போன ஞானேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாற்றிலிருந்து கடற்தொழிலுக்குச் சென்ற வேளை கடற்படைப்படகு மோதியதில் காணாமற்போனவரைத் தேடுவதற்கு நேற்றும் கடற்படையினர் அனுமதிக்காததை அடுத்து, அவரைத் தேடச் சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

கடந்த 31 ஆம் திகதி கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, கடற்படையினருடைய 'டோறா' மோதியதில் தகப்பனும் மகனும் காயமடைந்து பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களுடன் வள்ளத்தில் சென்ற பொன்னன் ஞானேஸ்வரன் என்பவர் காணாமற் போயிருந்தார். இவரைத் தேடும் முயற்சியில் நேற்று முன்தினம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



எங்க பிசகுதெண்டு பிரதமருக்கு இப்பவாகிலும் விளங்கினாச் சரி..

## ஆயுதம் கையளித்தால்தான் மீள்குடியமர்வு நடைபெறும்!

### முடிவில் மாற்றமில்லை என்கிறார் பலகல்ல



(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் குடியேற வேண்டுமானால், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கத்தான் வேண்டும் என்றும் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லையென்றும் ராணுவத்தளபதி பலகல்ல கூறியிருக்கின்றார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்று விஜயம் செய்த அவர், மல்வத்த பீடாதிபதி ஸ்ரீ விபசி தேரரையும் அஸ்கிரிய பீடாதிபதி உடுகம்பொல உத்தரகித்த தேரரையும் சந்தித்து, தற்போதைய நிலமைகள் தொடர்பாக விளக்கிக் கூறிய பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து ராணுவம் வெளியேறக்கூடாது என்றும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றாலும் நாட்டின் பாதுகாப்பு நிலமைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் பீடாதிபதிகள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ராணுவம் ஆதரவு வழங்கும் என்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிமுகாமுக்குள் இஸ்ரேலியப் படை தாக்குதல் ஏழு பலஸ்தீனப் போராளிகள் சூட்டுக்குப் பலி



காஸாவில் உள்ள யூதக்குடியேற்றங்களுக்கு அருகே ஏழு பலஸ்தீனப் போராளிகளை இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இயந்திரத்துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டரின் உதவியுடன் பலஸ்தீன அகதி முகாமிற்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவத்தினர் ஒரு மணித்தியாத்தினுள் இந்த நான்கு பலஸ்தீனப் போராளிகளையும் சுட்டுக்கொன்றுள்ளனர்.

பலஸ்தீன அகதி முகாமிற்குள் நுழைந்த இஸ்ரேலியப்படையினருக்கும் பலஸ்தீனப் போராளிகளுக்கும் இடையே பலத்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச்சமருக்கிடையில் அகப்பட்ட பொது மக்களும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை- இரவு நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது மூன்று பலஸ்தீன இளைஞர்கள் இஸ்ரேலிய பாதுகாப்பு அரண்மீது ஏறியபோது இஸ்ரேலிய இராணுவத்தினரால் சுடப்பட்டுள்ளனர்.

இம்மூன்று இளைஞர்களிடம் துப்பாக்கியுடன் குறடு மற்றும் கத்திகள் இருந்ததாக இஸ்ரேலியத் தரப்பு தெரிவிக்கின்றது.

# சீனாவின் விண்வெளிக் கலம் இவ்வருட பிற்பகுதியில் ஏவப்படும்



(பெய்ஜிங்)

விண் வெளிக்கு ஆட்களை அனுப்பும் தனது முதலாவது கலத்தினை சீனா இவ்வருட இறுதியில் விண் வெளிக்குச் செலுத்தத் திட்டமிட்டுள்ளது.

இச்செயற்பாடு மூலம், விண்வெளி வரலாற்றில, மனிதனை விணவெளிக்கு அனுப்பும் மூன்றாவது நாடாக சீனா விளங்கும்.

கடந்த வருடத்தின் இறுதி ஆறு மாத காலப்பகுதியில்- விண்ணிற்கு ஏவப்படவுள்ள விண்கலம் சங்காய் விண்தளத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்டதுடன், பரிசோதனைக் கட்டங்களையும் தாண்டியுள்ளதாக உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை- விண்ணிற்கு ஆட்களை ஏற்றிச்செல்லும் விண்கலத்தை எவரது உதவியின்றி, சீனாவே தயாரித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



லண்டன் மிருகக்காட்சிச்சாலையில் உள்ள மிருகங்களின் எண்ணிக்கை வருடாவருடம் கணக்கெடுக்கப்படுவது வழமை. இங்கும், போல் கேபெட் என்னும் பறவையியலாளர் அங்குள்ள பென்குயின் பறவைகளின் எண்ணிக்கையை ஆழ்ந்த கவனத்துடன் கணக்கெடுப்பதைப் படத்தில் காணலாம்.

## உலகவலம்

### முதற் களமுனை அணியை வளைகுடாவுக்கு அமெரிக்கா அனுப்பியது

(வொஷிங்ரன்)

ஈராக்கிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்காக மேலும் பதினையாயிரம் துருப்புக்களை வளைகுடாப் பகுதிக்கு அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.

தற்பொழுது அனுப்பி வைத்துள்ள காலாட்படையணியானது பாலைவன யுத்தப்பகுதியில் சண்டையிடக் கூடிய சிறப்புப் பயிற்சினை பெற்றது என பென்ரகன் அறிவித்துள்ளது. இதுவே, அமெரிக்கா அனுப்பியுள்ள முதலாவது களமுனை இராணுவ அணியினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அதிக புரதச்சத்துக் கொண்ட உருளைக் கிழங்கு உருவாக்கம்

அதிகளவு புரதச்சத்தினைக் கொண்டதாக, மரபணு ரீதியாக உருவாக்கப்பட்ட உருளைக்கிழங்கினை உற்பத்தி செய்துள்ள இந்திய விஞ்ஞானிகள்- அது நாட்டில் நிலவும் போசாக்கின்மையை நீக்கப்பயன்படும் என அறிவித்துள்ளனர்.

இந்தியாவின் மிக வறிய சிறுவர்களின் போசாக்கின்மையை போக்க இவ்வுருளைக்கிழங்கு பெரிதும் உதவும் என அதன் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டமானது, இந்திய அரசாங்கத்தின் பதினைந்து வருட சுகாதாரத்திட்டத்தின் ஒரு அங்கமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வுருளைக்கிழங்கினை புதுடெல்கி ஜவஹர்லால் நேரு பல்கலைகழக விஞ்ஞானிகள் உற்பத்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஷஸ் கிண்ண இறுதிப்போட்டி இங்கிலாந்து வீரர் சதமடித்தார்!



இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகள் பங்கு கொள்ளும் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று ஆரம்பமானபோது, இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, முதல் விக்கெட்டை இழந்து, தொடர்ந்து 32 ஆவது ஓட்டத்தை பெற்றபோது இரண்டாவது விக்கெட்டையும் பறிகொடுத்தது.

தொடர்ந்து ஆட வந்த மார்க் பௌச்சர், நசார் ஹுசேன் ஆகியோர் நின்று நிதானமாக விளையாடினர். பௌச்சர் 19 பவுண்டறிகளுடன் 124 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அணித் தலைவர் நசார் ஹுசைன் 75 ஓட்டங்களைப் பெற்றார்.

முதலாவது நாள் ஆட்டம் நேற்று மாலை இடைநிறுத்தப்பட்டபோது இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கிரோலி 6 ஓட்டங்களுடனும் அலக்ஸ் ஸ்டுவேர்ட் 20 ஓட்டங்களுடனும், ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் தென்னாபிரிக்கா 119 ஓட்டங்கள்



(கேப்டவுன்)

தென்னாபிரிக்க - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானபோது தென்னாபிரிக்க அணி முதலில் தனது துடுப்பாட்டத்தை தொடங்கியது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கிப்ஸ் மற்றும் சிமித் ஆகியோர் நண்பகல் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்ட போது 119 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கிப்ஸ் 62 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் - மாநகர சபை

**2003 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம், வாகன மிருகவரி, உயர் தொழில் மீதான வரி ஆகியவற்றிற்கான உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்**

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் உயர் தொழில் நிறுவனங்களும் வியாபார வரியையும், உயர் தொழில் மீதான வரியையும், மிருக வாகன வரியையும்

**எதிர்வரும் 31.03.2003 ந் திகதிக்கு**

முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும். கடந்த ஆண்டுகளில் உரிய கட்டணங்களை செலுத்தாதவர்கள் இவ்வாண்டிற்கான கட்டணத்துடன் பழைய நிலுவைகளையும் செலுத்துதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் உத்தரவுப் பத்திரம் பெறத் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

அத்துடன் வாகன மிருக உரிமத்தகடு பெறுபவர்கள் உரிமக் கட்டணம் ரூபா 5/- உடன், விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 5/-வும் சேர்த்து மொத்தம் ரூபா 10/- செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
2003.01.02

(சி-416)

மின்சார உபகரணங்கள் மற்றும் மின்சார வீட்டுப் பாவனைப்பொருட்கள் ஆகியவற்றுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
தர்சினி எலெக்ரிக்கல்ஸ்
அச்சுவேலி.

ராஜா யாழ்ப்பாணம்.

முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
சுந்தரா டிராவல்ஸ்
10.30, 2.30, 6.00
(சி-398)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், மீனா நடித்த
வில்லன்
11.00, 2.45, 6.00 (பு.நே.) (சி/397)

ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் ஏற்ற ஏற்றம்மிக்க அனைத்துத் துணிமணிகளையும், உங்கள் எண்ணம்போல் வண்ணம் வண்ணமாக எண்ணற்ற ரகங்களை, மலிவான விலையில் தெரிவு செய்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்
சீமாட்டி புடைவைக்கடல்
சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள், கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகளுக்கு கைராசியான ஒரே நிறுவனம்
சீமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை:
மங்கை சில்க்
15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# எவர் கோரிக்கைகள் விடுத்தாலும் பொன்சேகாவை இடமாற்ற முடியாது!

## அமைச்சர் மகேஸ்வரன் கடிதம் பற்றி ஒஸ்ரின் பதில்

(கொழும்பு)

யாழ்.பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ்ப்பாணத்திலிருந்து வேறு பகுதிக்கு இடமாற்றப்படமாட்டார் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளரிடம் பேசும்போது - அவரிடம் சரத் பொன்சேகாவை இடமாற்றம் செய்யுமாறு அமைச்சர் மகேஸ்வரன் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இப்பதிலைக் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசும்போது,

வடக்கிலிருந்து - மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை இடமாற்றும்படி எந்த அரசியல்வாதியிடமிருந்தோ அல்லது வேறு எவரிடமிருந்தோ எமக்கு எத்தகைய கடிதமும் கிடைக்கவில்லை. இவ்வாறு கோரிக்கைகள் வந்தாலும் அதன்படி இடமாற்றமும் நாம் செய்யமுடியாது என்றார்.

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீடுகள் பற்றி ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன. மேஜர் ஜெனரல் பொன்சேகா 8,000 வீடுகளென்றும், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் 15,000 வீடுகளென்றும், விடுதலைப் புலிகள் 29,000 வீடுகளென்றும் கூறுகின்றனர். இது பற்றிய சரியான தகவல்கள் பெறப்படவேண்டும்.

இராணுவம் - அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் தங்கியிருப்பதைப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணானதெனக் கூறமுடியாது எனவும் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

### வெளி நோயாளர்களின் அவலம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர்கள், வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறையினால் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றார்கள். நோயாளர்கள் நீண்டவரிசையில் வைத்தியசாலைப் பிரதான வீதிவரை சிகிச்சைக்காகக் காத்துநிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை குறித்துப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (116)

### வருடாந்த ஒன்றுகூடல்

பருத்தித்துறைச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில், நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை தலைமையில் வருடாந்த ஒன்றுகூடல் நடைபெறும். பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி உமா சிவபாதசுந்தரம் (சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்) வி.ப.வேலாயுதபிள்ளை (உதவி அரசாங்க அதிபர், வடமராட்சி கிழக்கு) ஆகியோர் கலந்துகொள்வர். (116)

# பொ.ஐ.முவுடன் ஜே.வி.பியின் கூட்டணி எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்படும்

## பத்தேகம தேரர் எச்சரிக்கிறார்

பொ.ஐ.முக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் அரசியல் கூட்டணி அமையுமேயானால் அதற்கு எதிராகத் தாம் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக லங்கா சமசமாஜக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வண.பத்தேகம தேரர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய கூட்டணி ஒன்றை அமைப்பது முன்னணியின் சட்ட விதிகளுக்கு முரணான விடயமாகும். முன்னணி வேறொரு கட்சியுடன் தொடர்புகளை வைத்திருப்பதோ, பேச்சுவார்த்தை நடத்துவதோ முன்னணியின் முடிவாகவே இருக்க வேண்டும்.

எனவே, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் கூட்டணி வைத்துக் கொள்ள முற்படுமேயானால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வோம் என வண.பத்தேகம தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிரிஷாந்தி கொலை வழக்கு

# மரணதண்டனை விதிக்கப்பட்டோர் உயர்நீதிமன்றில் மேன்முறையீடு!

(கொழும்பு)

செம்மணியில், மாணவி கிரிஷாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட நால்வரைக் கொன்று புதைத்த சம்பவத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து பேரும், தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற இப்படுகொலைச் சம்பவம் தொடர்பாக, மேன்முறையீட்டு நீதிமன்றில் ஐவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களது மேன்முறையீட்டு மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா- ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழுவொன்றை இவ்விசாரணைகளுக்காக நியமிப்பார் எனத் தெரியவருகிறது. (01,200)

### நல்லூர்க் கோட்ட பாடசாலை அதிபர் கூட்டம்

நல்லூர் கோட்டத்திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் இன்று பி.ப. 1 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி - நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயர் அறிவித்துள்ளார். (84)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் 6இல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2001 ஓகஸ்ட் மற்றும் 2002 ஏப்ரல் ஆகிய கல்வியாண்டுகளில் பரீட்சைக்குத் தோற்றி - பல்கலைக் கழக அனுமதிக்குத் தெரிவாகியுள்ள அனைத்துப் பீட மாணவர்களுக்குமான, கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

எனவே மேற்படி பல்கலைக் கழக அனுமதிக்குத் தெரிவான அனைத்துப்பீட மாணவர்களையும் அன்றைய தினம் விரிவுரைகளுக்குச் சமூகமளிக்குமாறு பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

# ஆயுதம் களையுமாறு கேட்டது நிபந்தனை அல்ல; பிரேரிப்பு மட்டுமே!

## இராணுவத் தளபதி பலகல்ல கூறுகின்றார்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டுமெனவும், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது நிபந்தனையல்ல, பிரேரிப்பு மட்டுமே என இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய இராணுவத் தளபதி, ஆயுதக்களைவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதப் புழக்கங்களைக் குறைக்க வேண்டுமே தவிர, ஒவ்வொருவரிடம் இருந்தும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்கின்ற கட்டாயமும் இல்லை எனவும் தெரிவித்தார்.

# மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க விரும்புகிறார் ஜனாதிபதி சந்திரிகா!

## தமிழ்க்கட்சிகள் கடுமையாக விமர்சனம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைதிக்கு எதிரான முயற்சிகள் மூலமாக, யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றே விரும்புகின்றார் எனத் தமிழ்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து - அமைதிவழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளைச் சிதைக்க முயற்சிக்கிறார்.

அமைதி முயற்சிகளுக்கு பெரும் பங்காற்றிவரும் நோர்வே நாட்டினைக் கண்மூடித்தனமாக எதிர்ப்பதன் மூலம் - தேவையற்ற பிரச்சினைகளை உண்டாக்க அவர் விரும்புகின்றார்.

1994 இல் விடுதலைப்புலிகளுடன் அவர் பேச்சுக்களை நடத்திய போதே - புலிகளின் குரல் இயங்கி வந்தது. அவருக்கும் அது தெரிந்திருந்தது. ஆனால் இன்று - வானொலி உபகரணங்களை அரசாங்கத்தின் அனுமதியுடன் விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்திருப்பதை அவர் எதிர்க்கிறார்.

அத்தோடு - மக்களது மீள்குடியமர்வை எதிர்க்கும் படை அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் - மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கவே அவர் விரும்புவதுபோல் தெரிகிறது என்று கூறினார்.

ரெலோ தலைவர் என்.ஸ்ரீகாந்தா கருத்து வெளியிடும்போது -

மிகத்தெளிவான வழிமுறைகளினூடாகப் பெறப்பட்டிருக்கும் வானொலி உபகரணங்கள் விடயத்தில் - ஜனாதிபதியின் வீண் விதண்டாவாதப் போக்கினை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் நடந்து வருவதையே அவரது செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது கருத்தில், விடுதலைப் புலிகள் நீண்டகாலமாக செயற்படுத்திவரும் வானொலிக்கான உபகரணங்கள் சட்டரீதியாகவே பெறப்பட்டன. அத்தோடு, அவை அமைதி வழிமுறைகளைப் பிரசாரப்படுத்தவுமே பயன்படவுள்ளன என்றார்.

# அச்செழுவில் ஒரு தொகுதி வீடுகளை ஒப்படைக்கப் படையினர் இணக்கம்!

(ஊரெழு)

அச்செழு இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் இராணுவத்தினரின் பாவனையில் உள்ள ஒரு தொகுதி வீடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பத்து வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிக்க, பொதுமக்கள்-படை அதிகாரிகள் சந்திப்பின்போது படைத் தரப்பினரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து - எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று, இக்கையளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

முன்பு ஒரு தொகுதி வீடுகளை ஒப்படைக்கப் படையினர் சம்மதித்தபோதும் - வீட்டின் உரிமையாளர்கள் கொழும்பிலும் மற்றும் வெளிநாடுகளிலும் வசித்து வந்ததால் இரண்டு வீடுகள் மட்டுமே ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (96)

# 15 வருடங்களுக்குப் பின்னர் ஆனையிறவில் நெற்செய்கை!

(சரசாலை)

சுமார் 15 வருடங்களின் பின்னர் ஆனையிறவுப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக 18 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் - இந்நிலப்பரப்பு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் - இந்நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாதிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (34)

## வட - கிழக்கு விசேட ஆட்சேர்ப்பு

# நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன!

(கொழும்பு)

இலங்கை நிர்வாகசேவைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக, வட - கிழக்குப் பகுதிகளில் விசேடமாக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியாகியுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு மேற்படி விசேட போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டது.

இப்பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானோர் விபரங்களை அறிந்து கொள்ள விரும்புவோர், 01-698605 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பணிப்பாளர் அபயசேகரவிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படி போட்டிப் பரீட்சையின் படி வட - கிழக்கிலுள்ள 117 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இவற்றில் 86 வெற்றிடங்கள் தமிழ்மொழி மூலமாகத் தோற்றியவர்களாலும், 31 வெற்றிடங்கள் சிங்களமொழி மூலமாகத் தோற்றியவர்களாலும் பூர்த்தியாக்கப்படவுள்ளன.

இப்பரீட்சையின்படி திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களிலிருந்து 75 சதவீதத்தினரும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 25 சதவீதத்தினரும் நியமனம் வழங்கத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

## பொன்னாலையில் மீள்குடியமர்வுக்கு அனுமதி

# இராணுவத் தரப்பின் இணக்கத்தை

# ஒரு வாரகாலத்திற்குள் செயற்படுத்துக!

## அரச அதிபரூடாக மக்கள் காலக்கெடு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் பத்மநாதன் மற்றும் இந்துக் கலாசார அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோர் யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் நடாத்திய சந்திப்பில், பொன்னாலை மக்களின் மீளக் குடியமர்வு தொடர்பாக முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, யாழ். இராணுவத் தளபதி இணங்கியுள்ளதாக, யாழ். அரசாங்க அதிபர் நேற்றுக்காலை பொன்னாலை மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

யாழ். அரச செயலகத்தில், நேற்றுக்காலை- பொன்னாலை மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் யாழ். அரச அதிபர் பத்மநாதனுக்கும் இடையே இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, நேற்றுமுன்தினம் யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் நடத்திய சந்திப்பில், பொன்னாலை மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பாக யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இணக்கம் தெரிவித்த விடயங்களை அரசாங்க அதிபர் பத்மநாதன் எடுத்து விளக்கினார்.

மீளக்குடியமர விரும்பும் மக்களுக்கு அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கவும், தற்போது கடற்படை அமைத்துள்ள முனரணை பிரதான வீதிக்கு பின்நகர்த்தவும் - இதை ஒரு வாரகாலத்திற்குள் செய்யவும் சரத் பொன்சேகா இணங்கியுள்ளதாகவும்,

கடற்தொழில் செய்பவர்களுக்கு கடலுக்குச் செல்வதற்கான பாதையைக் கடற்படை அமைத்துக் கொடுக்கத் தயாராகவிருப்பதாக சரத் பொன்சேகா தெரிவித்ததாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

இதன்போது, பொன்னாலை மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகள், இராணுவத் தரப்பால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட விடயங்களை ஒரு வாரகாலத்திற்குள் நிறைவேற்ற வசதியாக, தாம் நடத்திவரும் மறியற் போராட்டத்தை ஒருவார காலத்திற்குத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகவும் -

இவ் ஒரு வாரகாலத்திற்குள் மேற்படி விடயங்களை அமுல்படுத்தாவிட்டால் தமது மறியற் போராட்டத்தை தொடர்ந்து நடாத்துவோம் எனவும் பொன்னாலை மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். பொன்னாலைப் பகுதி மக்கள் கடந்த 30 ஆம் திகதி முதல் சங்கானைப் பிரதேச செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை தெரிந்ததே. (லி)

## காலாவதியான பொருட்கள் கொடிகாமத்தில் விற்பனை

### மக்கள் சிலருக்கு வயிற்றோட்டம்

கொடிகாமம் பிரதேசத்திலுள்ள கடைகளிலும், வரணிப் பிரதேசத்தில உள்ள கடைகளிலும் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

பால்மா வகைகள், பிஸ்கற் வகைகள் மற்றும் உப்பு, உளுந்து, கடலை என்பனவே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வரும் பொருட்கள் ஆகும்.

இதனை உட்கொள்வதால் சிறியோர் முதல் பெரியவர்கள் வரை வயிற்றோட்டத்திற்கு உள்ளாகியுள்ளனர் என, இப்பொருட்களை வாங்கியவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (27)

### உலர் உணவு பகிர்ந்தளிக்கப்பட்டது

(பளை)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பளைப் பிரதேசத்தில் வீதி அமைப்பினில் ஈடுபட்ட பொதுமக்களுக்கு உலருணவு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன்படி- புலோப்பளை கிழக்கு, மாசார், முகாவில், இயக்கச்சிப் பகுதிகளைச் சேர்ந்த 498 குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு, சீனி ஆகிய உலர் உணவுகள் வழங்கப்பட்டன.

இவ் உலர் உணவுப் பங்கீட்டினைப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை மேற்கொண்டது. (115)

### அலைந்து திரியும் சைக்கிள் உரிமையாளர்

நெல்லியடி ஈ.பி.டி.பியினரின் முகாமைச் சுற்றிவளைத்து வெகுஜனப் போராட்டம் நடத்திய சில வாரங்களின் பின்னரும், சைக்கிள்களைப் பறிகொடுத்த அப்பாவி மக்கள் அலைந்து திரிகின்றனர்.

சம்பவ தினத்தன்று பல பொது மக்கள் வீதியால் போக்குவரத்துக்களில் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது திடீரெனப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் செய்தனர். இதனால் வீதியால் சென்றவர்கள் தமது சைக்கிள்களை அவ்விடத்தில் போட்டுவிட்டு ஓடிச் சென்றனர். நிலைமை வழமைக்குத் திரும்பிய பின்னர் சைக்கிள் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறையிட்டனர்.

பொலிஸார் சைக்கிள்களைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும், அங்கு சென்று பெற்றுக்கொள்ளும்படியும் கூறினர். ஆனால், அங்கு சைக்கிள்கள் வந்து சேரவில்லை எனப் பொதுமக்கள் தெரிவித்தனர். சில சைக்கிள் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லும்போது, பொலிஸாரினால் சந்தேகத்தின்பேரில் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(22)

### தென்னை அழிவு மதிப்பீட்டு விபரம் கோரப்படுகிறது

பளைப் பிரதேசத்திலுள்ள தென்னைச் செய்கையாளர்களில் இதுவரை தென்னை அழிவு விபரங்களை வழங்காத தென்னைச் செய்கையாளர்கள்- காய்க்கும் மரங்கள், இளங்கன்றுகள், தென்னம் நாற்றுக்கள் ஆகியன தொடர்பான இழப்பு விபரங்களை உரியமுறையில் பூர்த்தி செய்து, கிராமசேவகரிடம் உறுதிப்படுத்திய பின்னர், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்திடம் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (115)

## புலிகளுக்கு வானொலி உபகரணம்

# சிங்கள அமைப்புக்கள் வழக்குத் தாக்கல்

## பேனாட், புலித்தேவன் பிரதிவாதிகள்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்களை அனுமதித்தமைக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சிங்கள மகா சங்கத்தின் சார்பில் பியசேன திசநாயக்க மற்றும் இன்னொருவர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். புலிகளுககு வானொலி உபகரணங்களை அனுமதித்தது சட்டவிரோதம் எனவும், இதனைப் பறிமுதல் செய்து அரச உடமையாக்க வேண்டும் எனவும், அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பேனாட் குணதிலக, நோர்வேத் தூதுவர் வெஸ்போர்க், புலித்தேவன் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில். HAPPY BIRTHDAY



நேற்றைய தினம் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

பெயர் : சா.மதுரமி
முகவரி: 101,கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------
முகவரி:------------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------
பெற்றார் ஒப்பம்


# நிரந்தர வைத்தியர் இன்றி இயங்கும் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை

**செய்திக் கட்டுரை**



தீவகத்திலிருந்து மக்கள் இடம்பெயாந்த பின்னர், 1996 ஆம் - ஆண்டு மக்கள் மீண்டும் தீவகத்தில் மீள்குடியேறினர்.

ஆனால் - தீவக மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான - ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் மட்டும் இன்றுவரைக்கும் ஒரு நிரந்தரமான வைத்தியர் நியமிக்கப்படவில்லை.

மக்கள் மீள்குடியேறிய காலம் தொடக்கம் இன்றுவரையும் ஓய்வுபெற்ற வைத்தியர் ஒருவரே கடமைபுரிந்து வருகின்றார்.

தீவுப்பகுதி மக்கள் அனைவருக்குமான ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில், ஓர் நிரந்தர வைத்தியர் இன்னமும் நியமிக்கப்படாதது மக்களிடம் பெரும் விசனத்தைத் தோற்றுவித்துள்ளது.

அத்துடன், இங்கு கடமைபுரியும் வைத்தியருக்கு சுகயீனம் ஏற்படின், வைத்தியர் இன்றி ஒருவாரம் முதல் இரு வாரங்கள்கூட தாதிமாரின் பராமரிப்பிலேயே வைத்தியசாலை இயங்குகின்றது. சென்ற வாரம்கூட வைத்தியருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக - வைத்தியசாலை வைத்தியர் இன்றிக் காணப்பட்டது.

தற்பொழுது பெய்துவரும் மழையினால் பலதரப்பட்ட நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகி பல நோயாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு தகுந்த சிகிச்சை கிடைக்காமல் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். இந்நிலையில் சுகாதாரப் பிரிவினர், மேல் நடவடிக்கை எடுக்காததையிட்டு தீவக மக்களும் பொது அமைப்பினரும் கவலை தெரிவிக்கின்றனர்.

**- ம.வித்தியாதரன்.**

### இரவோடு இரவாக கற்குவியல்கள் கடத்தல்

மாலி சந்திக்கும் மந்திகைக்கும் இடையில் உள்ள பிரதான வீதியில், வீதித் திருத்தவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், திருத்தவேலைகளுக்காகப் பறிக்கப்பட்ட கற்குவியல்கள், இரவோடு இரவாகக் கடத்தப்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (116)

### செல்வச்சந்நிதியில் மங்கள இசைநிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் வாராந்தம் நடாத்தப்படும் நிகழ்ச்சித் தொடரில் - எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில்- இசைக்குயில் இராமையாவின் புதல்வர்களின் மங்கள இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

### இளைஞர் குழு மடக்கிப் பிடித்தது திருடர் கோஷ்டியை!

நீர்வேலிப் பகுதியில் திருடர் கோஷ்டி ஒன்று தொடர்ந்து தமது கைவரிசையைக் காட்டி வந்தது.

இதனை அறிந்த அப்பகுதி இளைஞர்கள் ஒன்றுதிரண்டு, இரவு வேளை மறைந்து நின்று, அவர்களை மடக்கிப் பிடித்து, கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (27)



கியூடெக் நிறுவனத்தின் உயிர்ப்பூட்டல் குழுவினரின் அனுசரணையுடன்- புன்னாலைக்கட்டுவன் மத்தாவோடை சனசமூக நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட இலவசத் திருமணப் பதிவின்போது - பதிவுகளை மேற்கொள்ளப்படுவதைப் படத்தில் காணலாம்.



சாவற்கட்டு விதவைகள் சங்க உறுப்பினர்களுடன் - கியூடெக் நிறுவனப் பிரதிநிதிகள்.




# மாட்டு வண்டில் ஓட்டியும் சமூக சேவை செய்தேன்!

**☆☆☆ யாழ். மாவட்ட மகளிர் குழு உறுப்பினரும், சுழிபுரம் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவியும், சமூக சேவகியுமான திருமதி புனிதவதியுடனான நேர்காணல். ☆☆☆**



*கேள்வி:* நீங்கள் தற்போது சமூகத்தவர்களுக்கு என்ன மாதிரியான சேவைகளை வழங்கி வருகிறீர்கள்- அதை எவ்வாறு கற்றுக் கொண்டீர்கள்?

*பதில்:* நான் சிறுவயதிலிருந்தே பாடசாலைகளில் நடைபெறுகின்ற மன்றத் தெரிவுகள் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்று அதில் தெரிவு செய்யப்பட்டு ஒரு அனுபவத்தைப் பெற்று தலைமைத்துவத்தை ஏற்கின்ற பழக்கத்தையும், துடிப்பாக நின்று செயற்படுகின்ற பண்புகளையும் வளர்த்துக்கொண்டேன்.

பின்னர் ஐக்கிய நாணய சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம், விவசாய சம்மேளனம் மற்றும் மாவட்ட மகளிர் குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருந்து செயற்பட்டு வருகின்றேன்.

கடந்த 20 வருடங்களாக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை ஆகிய இரு பாடசாலைகளிலும் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏதாவது உதவிகள் தேவை என்று சொன்னால் அவற்றைச் செய்துவருகிறேன்.

பொழுதுபோக்காக அரட்டை அடிக்கின்ற நேரம், நித்திரை கொள்கின்ற நேரங்களை ஒதுக்கி, என்ன அலுவலிற்கு என்ன நேரத்திற்குப் போகவேண்டும் என்று தெரிந்தால் அதற்குரிய நேரத்தை ஒதுக்கி அதைச் செய்து முடிப்பேன்.

*கேள்வி:* இதனால் குடும்ப வேலைகள் பாதிக்கப் படுவதில்லையா?

*பதில்:* குடும்ப வேலைகள் பாதிக்கப்படும் என்றில்லை. ஏனென்றால் எல்லாம் மனதைப் பொறுத்தது தான். ஏதாவது வெளிவேலைகள் இருக்கிறது என்றால் வீட்டு வேலைகளை நேரத்துடனேயே செய்து முடித்து விடுவேன். குறிப்பாக சமையல் வேலைகளையும் நேரத்துடன் செய்து விடுவேன். என்னைப் போலவே எனது பிள்ளைகளும் யாருக்கும் உதவி தேவையென்று கேட்டால் சலிக்காமல் செய்து கொடுப்பார்கள்.

எனக்கு மூன்று பிள்ளைகள். 2 ஆண்கள், ஒரு பெண்பிள்ளை. பெண்பிள்ளைக்கு 21 வயதாகிறது. அவர் திருமணம் செய்து கனடாவிற்குப் போய்விட்டார். மற்றைய மகன் கொழும்பில் தையல்வேலை செய்கிறார். மற்ற மகன் அடுத்தவருடம் O/L பரீட்சை எடுக்கிறார். பொருளாதார ரீதியாக எனக்கு எதுவித சிக்கலுமில்லை. எனது சொந்தத் தொழில் விவசாயம் தான். இவ்வருடம் அதைச் செய்யமுடியாது போய்விட்டது. மகளை கனடாவிற்கு அனுப்புவதற்காக கொழும்பிற்கு சென்றதால் அது பாதிப்படைந்துவிட்டது. தோட்டத்தில் வெங்காயம், மிளகாய் மரக்கறி வகைகளும் வயலில் நெல், எள்ளுப் போன்றவைகளையும் பயிரிட்டு வருகிறேன்.

*கேள்வி:* இவ்வை தவிர நீங்களாகத் துணிந்து என்ன மாதிரியான உதவிகளைச் செய்து வருகிறீர்கள்?

*பதில்:* இடம்பெயர்ந்தபோது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டு இருந்த போது அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளையும் சேவையாகச் செய்து வந்தேன்.

சிறுவயதிலேயே எனக்கு மாட்டு வண்டில் ஓட்டக் கூடிய பழக்கம் இருந்ததால் வண்டிலில் பிள்ளைகளை ஏற்றி இறக்கினேன். 10 பிள்ளைகள் அளவில் வருவார்கள். அதுவும் கூடுதலாக விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்களின் பிள்ளைகளையே ஏற்றி இறக்கினேன். தற்போது யாரும் தெரிந்தவர்கள், அறிந்தவர்களின் அவசரத்திற்கு குறிப்பாக, பிரசவத்திற்காக சங்கானை வைத்தியசாலைக்கு வண்டிலில் ஏற்றிச் செல்வேன். இவற்றையும் குறைந்த ஊதியத்துடன் செய்து வந்ததால் வாடகைக்கு வண்டில் ஓட்டுபவர்களிடம் இருந்து எனக்குக் கடும்எதிர்ப்பும் இருந்தது. கடன் அடிப்படையில் பணம் தருமதி இருந்தால் கூட அவர்களுக்கு கஷ்டம் என்று தெரிந்தால் அவற்றை மீளப்பெற மாட்டேன். மற்றும்படி, உதவிகேட்டு வருபவர்களுக்கு நேரம் காலம் பாராமல் உதவி செய்வேன். ஆனால், இந்தக் கோவிலைச் சாட்டி நிதி, பொருள் சேகரிக்க வருபவர்களிற்குக் கட்டாயமாக உதவி வழங்குவதில்லை.

என்னுடைய வீடு தேடி உதவியென்று வந்தால் கட்டாயம் செய்துதான் ஆகுவேன். போன கிழமையும் இரவு 1 மணியளவில் பிரசவத்துக்காக அயல் வீட்டிலிருந்த பெண்ணைச் சங்கானை வைத்தியசாலையில் கொண்டுபோய் அனுமதித்தேன். பின்னர், அப்பெண் குழந்தையைப் பிரசவித்த பின்னர்தான் வீட்டிற்கு வந்து எனது வேலைகளைச் செய்தேன். நான் இவ்வாறு அயலவர்களுக்குச் செய்யும் உதவி, ஆண்டவன் எனக்குத் தந்த கொடை என்றுதான் சொல்ல வேண்டும்.

*கேள்வி:* நீங்கள் மாட்டு வண்டிலில் பிள்ளைகளை ஏற்றி இறக்கும் தொழிலை எப்போது ஆரம்பித்தீர்கள்?

*பதில்:* நான் 1996 ஆம் ஆண்டு தொடங்கி 2000 ஆம் ஆண்டு வரை பிள்ளைகளை வண்டிலில் ஏற்றிப் பாடசாலைக்குக் கொண்டு செல்லுவேன். பிள்ளைகளை வண்டிலில் ஏற்றினால் அவர்கள் மீதுதான் என்னுடைய கவனம் இருக்கும். கொஞ்சம் குழப்படி செய்கிற பிள்ளைகளை எனக்குப் பக்கத்திலேயே இருத்துவேன். குழப்படி இல்லாத மற்றப் பிள்ளைகளை பின்னால் இருத்திவிடுவேன். ஆனாலும் குழப்படி செய்கிற பிள்ளைகளைக்கூட நான் அதிகாரமாகப் பேசாமல் அன்பான வழியில் அணுகித் திருத்திக் கொள்ளுவேன். இதனால் என்னில் அவர்களுக்கு மிகுந்த அன்பு.

பின்னர் ஓரளவு வாகன வசதிகள் வர, பிள்ளைகள் வண்டிலில்வர வெட்கப்பட்டு வேறு வாகனங்களை நாடினார்கள். இதனால், பிள்ளைகளின் எண்ணிக்கை 4 ஆகக் குறைவடையவே அவர்களைச் சைக்கிளில் ஏற்றிப் பாடசாலைக்கு கொண்டு செல்ல ஆரம்பித்தேன்.

வண்டில் பயணம் எனக்கு ஒரு சுவாரசியமான பயணந்தான். நான் கதைப்புத்தகம் வாசித்துக்கொண்டே வண்டில் ஓட்டிச் செல்வேன்.

*கேள்வி:* இவை தவிர வேறு சேவைகள் பற்றி...

*பதில்:* திருமண சேவை செய்து வருகிறேன். இதை ஒரு தொழிலாக என்றில்லாமல் செய்து வருகிறேன். அநேகமாக இனி எங்களால் முடியாது என்ற நிலையில் கவனிக்க முடியாத கட்டத்தில் இருப்பவர்கள்தான் கடைசியாக என்னிடம் வருவார்கள். அவர்களுக்கு திருமண ஏற்பாடுகளுக்கான முயற்சிகளைச் செய்துள்ளேன். அதிலும் மிகவும் வசதி குறைந்தவர்கள்தான் என்னை நாடி வருவார்கள். இவர்களுக்கும் பொருத்தமானவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, இந்தப் பிள்ளையை ஏற்றால் இவரால் சீராக வைத்துப் பார்க்க முடியுமா என்று பல வழிகளிலும் அவரைப் பற்றி ஆராய்ந்து எனது மனதிற்குத் திருப்தி என்று பட்டால் மட்டுமே செய்து கொடுப்பேன். மற்றப்படி கண்டபடி கொண்டு போய்த் தள்ளிவிட மாட்டேன்.

**நேர்காணல்: நகுலன், மணிசேகரன்**

# சமையல் குறிப்புகள்

✹ வாழைக்காய் வெட்டுவதற்கு முன் சிறிது தேங்காய் எண்ணெயைக் கையில் தடவிக் கொண்டால் கைகளில் கறைபடியாது.

✹ வடை, பகோடா, செய்யும்போது ஒரு கரண்டி ரவையைக் கலந்துசெய்தால், அவை மொறமொறப்பாகவும் நல்ல சுவையாகவும் இருக்கும்.

✹ இரவில் தயிருக்குப் பாலில் உறை ஊற்றும்போது சிறிதளவு கருவேப்பிலையைப் போட்டு உறைய வைத்தல் காலையில் தயிர் நல்ல வாசனையாக இருக்கும்.

✹ பருப்புக்களின் சுவை கெடாமல் இருக்க பிளாஸ்ரிக் போத்தல் அல்லது கண்ணாடிப் போத்தல்களில் பத்திரப்படுத்த வேண்டும்.

✹ வெந்தயத்தை வறுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டால், சாம்பாருக்குத் தாளிப்பதற்குப் பதிலாக பொடியைப் போடலாம். நல்ல மணமாகவும் சுவையாகவும் இருக்கும்.

✹ கொதிக்க வைத்து ஆறிய தண்ணீரைப் பாத்திரத்தில் ஊற்றி குளிரூட்டியில் வைத்தால் ஐஸ்கட்டி விரைவில் கிடைக்கும்

✹ கீரையினை நன்றாகத் தண்ணீரில் கழுவி, சுத்தம் செய்து விட்டு, வெட்டிச் சமைக்க வேண்டும். அதை, வெட்டிய பின் சுத்தம் செய்தால் கீரையின் சத்து நீங்கிவிடும்.

# அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






சிந்தி,

புத்தாண்டு வாழ்த்துக்களுடன் வந்த உன் கடிதம் மகிழ வைத்தது. புதிய ஆண்டில் செயற்படுத்துவதற்காகப் பல திட்டங்களை உங்கள் கிராம மகளிர் முன்னேற்ற நிலையம் செயற்படுத்த உள்ளதாக எழுதியிருந்தாய். உங்கள் முயற்சி வெற்றிபெற வாழ்த்துக்கள்.

ஆனால், நிலையத் தலைவி சுகுமாரியின் கணவரைச் சந்தித்து உரையாடியதில் எந்தப் பயனும் கிடைக்கவில்லையெனக் கவலைப்பட்டிருந்தாய்.

சுகுமாரியின் கணவர் இப்படி இருப்பாரென்று நீ மட்டுமல்ல நானும் எதிர்பார்க்கவில்லைத்தான்.

பெண்கள் பாதிக்கப்படுவதாகக் கூறுவது கற்பனையென்றும், குடும்பப் பொறுப்பை ஏற்று அதனை நிர்வகிப்பது அவர்களது கடமையென்றும் கருத்துக் கூறிய அவர், உனது விளக்கங்களைச் செவிமடுக்க விரும்பாது எதிர்வாதம் செய்தாரென்றும் எழுதியிருந்தாய்.

எதிரேயிருப்பவன் எதிரியென்று ஒருவன் கருத ஆரம்பித்தால் அவன் அமிர்தத்தைக் கொடுத்தாலும் அதனையும் விஷமாகத்தான் கருதுவான்.

இதே போன்றுதான் பெண் கூறுவதை அவர் தவறான கருத்தென்றே கருதுவார். எனவே ஓர் ஆண் இக்கருத்துக்களை விளக்கிக் கூறினால் அவர் ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலிலே நாம் பெண்களின் நலனிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட ஆண்களை ஒன்று சேர்த்து பயிற்சியளித்து இத்தகைய தவறான கருத்துக் கொண்டோரைஅணுகி, அவர்களது கருத்துக்களை மாற்ற முற்பட வேண்டும்.

இது முக்கியமான, ஒரு திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இன்று பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் இவர்கள். ஆகவே இவர்களது மனமாற்றத்திலே எமது முன்னேற்றம் தங்கியுள்ளது.

சிந்தி, உண்மையிலேயே சுகுமாரி திறமையானவளே. இல்லாவிட்டால் வீட்டிலேயே இவ்வளவு எதிர்ப்பு இருக்கும்பொழுது சமூகசேவையில் ஈடுபட்டிருக்க முடியுமா? அவளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவி.

இதே போன்ற மனத்திடம் எம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். விதியே என்று தளர்ந்து போகாது, சமாளித்து முன்னேற உறுதியெடுக்க வேண்டும்.

அன்புடன்
யோசி

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# சீதன முறைமை

திருமணத்தின்போது பெண்களுக்குச் சீதனம் வழங்கும் முறையானது, யாழ்ப்பாண சமூகத்தில் ஆழமாக வேரோடிய நிறுவனமயப்பட்ட ஒரு வழக்கமாகும். யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய சொத்துடமைச் சட்டமாகிய தேசவழமைச் சட்டக்கோவையில், சீதன முறைமை ஒரு சமூகஒழுங்கு முறையாகக் கொள்ளப்படுகிறது. மிகவும் சுவாரஸ்யமாக இந்தச் சொத்துடமைச் சட்டத்தில், தாய் வழியாகவும், தந்தை வழியாகவும் பெறப்படும் சொத்துக்களைப் பேணுவது பற்றிய விதிமுறைகள் அடங்கியுள்ளன. தாய்வழிச் சொத்துடமையின் மூலம், முந்நூறு ஆண்டுகால வரலாற்றையுடைய தேசவழமைச்சட்டத்திற்கும் அப்பாலானது. யாழ்ப்பாணத்துச் சீதன வழக்குமுறையின் வரலாற்று வேரும் ஆழமானது. பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னர், தென்மேற்கு இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தில் குடியேறிய திராவிடத் தழிழர்களிடமிருந்தே இவ்வழக்குமுறை தோன்றியிருக்கலாமென நம்பப்படுகிறது.

'மலபார்' என காலனித்துவவாதிகளால் வர்ணிக்கப்பட்ட பண்டைய திராவிட இனத்தைச் சேர்ந்த கேரள மக்கள் மத்தியில் நிலவிய "மருமகள் தாயம்" என்ற சொத்துடமைச் சட்டத்திலிருந்தே சீதன முறைமை தோன்றியிருக்கலாம் என்பது சில ஆய்வாளர்களின் கருத்து. காலனித்துவவாதிகள் இச்சொத்துடமைச் சட்டத்தை திருத்தியபோதும், பெண்களுக்கு சீதனம் வழங்கும் மரபுமுறை, சாராம்சத்தில் மாறவில்லை. யாழ்ப்பாண தமிழ்ச் சமூகத்தில் நிலையூன்றி, நீடித்து வரும் சீதனமுறைமை இன்றும் தமிழ்மக்களின் வாழ்வை நிர்ணயித்துவரும் சக்தியாக விளங்குகின்றது. குறிப்பாக, பெண்களின் வாழ்வையே பாரதூரமாகப் பாதிக்கும் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. இந்தப் பிரச்சினையின் அடிப்படையில்தான் ஒரு தமிழ்ப் பெண்ணின் சமூக அந்தஸ்த்தும், அவளது சமூகப் பொருளாதார வாழ்வும் நிர்ணயமாகின்றது.

## - அடேல் பாலசிங்கம்.

நாம் லண்டனில் வாழ்ந்து வந்தபோதே யாழப்பாணத் தமிழ்மக்களின் இச் சீதனவழக்குமுறை எனது கவனத்தை ஈர்ந்தது. லண்டனில் எமக்குத் தெரிந்த இளைஞர்களில் பெரும்பாலானோர், யாழ்ப்பாணத்திலிருந்த தமது சகோதரிகளின் சீதனத்திற்காக உழைத்துப் பணம் சேர்ப்பதை அறிந்தோம். இரவு பகலாக ஓய்வின்றி உழைத்து, தமது சகோதரிகளுக்கு பெருந்தொகையில் சீதனம் சேர்க்கும் அங்கலாய்ப்பில், சீதன வழக்குமுறை பற்றி அவர்கள் கண்டனமும், அதிருப்தியும் தெரிவிப்பதைக் கேட்டிருக்கின்றேன். சீதனச் சந்தையில் பண்டப்பொருட்கள் போல தமது சகோதரிகளுக்கு விலை பேசப்படுவதால் சீதனமுறையை அவர்கள் சபிப்பதும் உண்டு. இதில் என்னை ஆச்சரியப்பட வைத்தது என்னவென்றால், இதே இளைஞர்கள் தமக்குத் திருமணம் பேசப்படும்பொழுது, எடுத்துக் கொண்ட முற்றிலும் மாறான நிலைப்பாடுதான், ஒரு சிலரைத் தவிர, அநேகமானோர் சீதனம் வாங்கியே திருமணம் செய்தனர். அது மட்டுமன்றி சீதனம் வாங்கியதையும நியாயப்படுத்த முனைந்தனர். எழுபதுகளின் கடைசியிலும், எண்பதுகளின் ஆரம்பத்திலும் பெண்ணியச் சிந்தனைகள் என்னிடம் தீவிரம் பெற்றிருந்த காலத்தில் ஒரு பெண் பணமும் சொத்தும் கொடுத்துக் கணவனை வாங்குகின்ற வாழ்க்கையை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. இந்தக் கீழ்த்தரமான வழக்குமுறைக்கு தமிழ்ப் பெண்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு நிலவும் என்று நான் எண்ணினேன். ஆனால் நான் தெரிந்து கொண்டதைவிட சீதனமுறைமை மிகவும் சிக்கலானது என்பதை நான் பின்னர் உணர்ந்து கொண்டேன். திருமணத்திற்கு முன்பாக மணமகனுக்கும், அவனது குடும்பத்திற்கும் இணக்கப்பாடு கண்ட ஒரு தொகைப்பணமும் சொத்தும் வழங்கும் ஒரு எளிய நடைமுறையாக மட்டும் சீதன முறைமையை எடைபோட முடியாது.

சீதன வழக்கு முறையானது யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூக, பொருளாதார வாழ்விற்கு ஒரு அச்சாணியான பிரச்சினை; குறிப்பாகத் தமிழ்ப்பெண்களின் வாழ்விலும் கௌரவத்திலும் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு பிரச்சினை. தமிழ்ச் சமூகத்துடன் நான் ஆழமாக நெருங்கிப் பழகியபோதுதான் சீதன வழக்கின் முழுமையான பரிமாணங்களையும் புரிந்து கொள்ள முடிந்தது. எழுபதுகளின் இறுதியிலும் எண்பதுகளின் ஆரம்பத்திலும் நான் பிரபாகரன் அவர்களையும் விடுதலைப்புலிப் போராளிகளையும் இந்தியாவில் சந்தித்தபோது அவர்கள் சீதன முறைமையை வன்மையாக எதிர்த்தார்கள். விடுதலைப் புலிகளின் அரசியற் கொள்கைத் திட்டத்தில் சீதன ஒழிப்பு ஒரு முக்கிய அம்சமாக இடம்பெறவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். பெண்களை இழிவுபடுத்தும் இந்நடைமுறை முற்றாக ஒழிக்கப்படவேண்டுமென அக்காலத்திலிருந்தே பெண் போராளிகளும் கடுமையான நிலைப்பாட்டை எடுத்தனர்.



யாழ்ப்பாணத்திலுள்ள சீதன வழக்குமுறைக்குக் கடுமையான எதிர்ப்பு நிலவும் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் நான் யாழ்ப்பாணம் சென்று, தமிழ் மக்களோடு கூடி வாழ்ந்த காலத்தில், சீதன நடைமுறைக்கு கூட்டான பெரும் எதிர்ப்பு நிலவவில்லை எனக் கண்டபோது நான் ஆச்சரியமடைந்தேன். நான் நினைத்ததற்கு மாறாக, சீதன வழக்குப் பற்றி மக்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவின.

சிலர், சீதன முறைமையை ஆதரிக்கவும் செய்தார்கள். குறிப்பாகப் படித்த பெண்கள் மட்டத்தில் சீதனத்திற்கு ஆதரவு நிலவியதைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். சொத்துடைமை படைத்த பெண்களும் சீதன வழக்குக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்தனர். குடும்பத்தின் பாரம்பரிய சொத்துடைமைகளே பெண்களுக்குச் சீதனமாக பராதீனப்படுத்தப்படுகின்றது என்றும், சீதனமுறை அகற்றப்பட்டால் இந்தச் சொத்துரிமையைப் பெண்கள் இழக்க நேரிடும் என்பதும் இவர்களது கருத்து. தங்கள் பெண்பிள்ளைகள் திருமணம் செய்யும்போது, அவர்களுக்கு வீடாக, நிலமாக, நகையாக, பணமாகக் குடும்பச் சொத்தைப் பகிர்ந்தளிப்பது அல்லது நன்கொடை வழங்குவது தமது கடமை என்று பெற்றோர்கள் வாதித்தனர். பெற்றோருக்கு உரிய இந்த உரிமையையும், அன்பு வெளிப்பாட்டையும் சட்டமூலமாகப் பறித்து விடக்கூடாது என்பதும் அவர்களது வாதம். சீதனம் கொடுக்காமல் தமது பெண்பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைப்பது தமக்கு உரித்தான பரம்பரைச் சொத்தையே குறிப்பது என்பதால், சீதனமுறைமையைத் தடைசெய்து தமது சொத்துரிமையைப் பறிப்பது நியாயமாகாது என்றும் சில பெண்கள் வாதிட்டனர். சீதன வழக்கை கடுமையாக எதிர்ப்பவர்கள் கூட, சமூகத்தில் ஆழ வேரூன்றி நிற்கும் இந்நடைமுறையை சட்டமூலமாக மட்டும் அழிப்பது மிகவும் கடினம் எனக் கருத்துத் தெரிவித்தனர்.

சீதன நடைமுறையை ஒழித்துக் கட்டுவதாயின் சமூகத்தின் மனநிலையில் அடிப்படையான மாற்றம் நிகழ வேண்டும் என்றும் இவர்கள் வாதித்தனர். சீதனப் பிரச்சினை பற்றிய விவாதம் எழுப்பிய பல ரகமான சர்ச்சைகளும், கருத்துக்களும் எனது மனதில் பதியவே செய்தது.

*(நன்றி - சுதந்திர வேட்கை)*

## உரமாகும் உயிர்ச்சிலைகள்

மலர்ந்து விட்ட இந்தப் பூமியில்
சுருதி ஒலியும் சலங்கை ஒலியும்
ஏன் சலனப்படுத்தப்படுகின்றது.
சரணமும் பல்லவியும்
ஏன் பலவீனப்படுத்தப்படுகின்றது.
கண் மலர்ந்து சிரிக்கும் சிலை
ஏன் சிதைக்கப்படுகின்றது.
காவியங்கள் கண்ணீராகி
ஏன் கல்லறைக்கு அனுப்பப்படுகின்றது.
சீதனம் என்னும் சிரச் சேதம்
ஏராளம் ஏராளம்.
குலுங்கிச் சிரிக்கும்
உயிர்ச்சிலைகள்
உயிராக இருக்கட்டும்.
கல்லறைக்கு உயிர்ச்சிலைகள்
உரமாக வேண்டாமே!

## தோல்விகள்

உன் கனவுகளோடு நீ
உல்லாசமாக வாழ்
ஆனால், என் கவிக்குழந்தையை
அனாதையாக்கிவிடாதே
நீ வாசிக்கும்
இந்தக் கவிவரியில்தான்
என் இதயத்தை ஒட்டியிருக்கிறேன்
பாதத்தில் குத்தும்
சிறிய முள்ளைப்போல்
என் இதயத்தைக்
குத்துகின்றது
உன் செயல்கள்.
நானோ, உன் செயல்கள்
ஒவ்வொன்றுக்கும்
சமாதானம் கூறிக் கூறி
தோற்றுப்போகிறேன்.
ஏனெனில் ~
உன்னை நினைக்கத் தெரிந்த
பின்புதான்
இத்தனை தோல்விகள்!

கவிதைச்சோலை

~ சி.நளாயினி, நீர்வையூரான்.

# நகம் அழகாக இருக்க

# அழகியற் குறிப்புகள்

## கைகளைச் சுத்தம் செய்தல் (MANICURE)

கைவிரல்களும், நகங்களும் சுத்தமாகவும் அழகாகவும் இருக்க அழகுபடுத்தல் முறைகளைத் தெரிந்துகொள்வது பெண்களுக்கு அவசியம். கவனக்குறைவினாலும் கல்சியத்தின் பற்றாக் குறையினாலும் , குறைவான இரத்தத்தினாலும், நகப் பொலிஷ்களை அடிக்கடி மாற்றி உபயோகிப்பதாலும், மற்றும் பாத்திரம், துணிகளைச் சுத்தம் செய்வதாலும் பெண்களுக்கு நகங்களில் பல குறைபாடுகள் தோன்றலாம். அநேகமான பெண்கள் இதில் கவனம் செலுத்துவதில்லை. கைகளில் சுருக்கங்களும் நகங்களில் கோளாறுகளும் அவர்களின் வயதைக் காட்டிவிடுவதுடன் விகாரமாகவும் விளங்கும். இதனால் கைகளுக்கு manicrue செய்து கொள்வதும் கால்களுக்கு pedicure செய்து கொள்வதும் மிகவும் அவசியம். இதனைச் செய்வதற்கு pedicure, manicrue 'செற்'றை அழகு சாதனக் கடைகளில் வாங்கிக் கொள்ளலாம்.









**திருமதி.யோகினி சண்முகநாதன்**

*செய்முறை*

முதலில் ஒரு துவாயை மடி மீது விரித்து வைத்துக்கொண்டு நகப்பொலிஷ் ரிமூவரினால் நகங்களிலுள்ள நகப்பொலிஷ்களை சுத்தம் செய்து கொள்ளவும். பின் நகங்களை அழகாக வெட்டி, அரத்தினால் (Nail file) லேசாகத் தேய்த்து விடவும். பின் ஒரு பாத்திரத்தில் லேசான வெந்நீர் எடுத்து அதில் சிறிது ஷம்போ, டெட்டோல் இருதுளி, சிறிது தேசிச்சாறு கலந்து அதில் கைவிரல்களை ஐந்து நிமிடங்களுக்கு ஊற விடவும். பின் கைகளை வெளியே எடுத்து ஒரு துணியில் கைகளைத் துடைக்கவும். பின் நகங்களின் ஓரங்களில் கியூடிகல் கிறீமைத் (cuticle cream) தடவி இரண்டு நிமிடங்களுக்கு ஊறவிடவும். பின் கியூடிகல் புஷரை (cuticle pusher) நகத்தின் அடிப்பாகத்தில் வைத்து எதிர்ப்புறமாகத் தள்ள வேண்டும். அதன்பின் ஒரேஞ் ஸ்ரிக் (orange stick) மூலம் நகங்களின் உட்பாகத்திலுள்ள அழுக்கை சுத்தம் செய்யவும். ஹூ·ப் பிளேட் (hoof blade) உதவியால் நக ஓரங்களிலுள்ள அழுக்கை அகற்றிக் கொள்ளவும். இப்போது கைகள் மிக மென்மையாக இருக்கும். இதன் பின் கோல்ட் கிறீம் (cold cream) போட்டுக் கைகளையும், கைவிரல்களையும் சிறிது massage செய்து கொள்ளவும். பின் கைகளை லேசாக வெந்நீரில் நன்றாகக் கழுவித் துடைத்துக் கொள்ளவும். கை நகங்களையும் எண்ணெய் பசையில்லாமல் நன்றாகத் துடைத்துக் கொள்ளவும். இவ்வாறு செய்து கொண்டால்தான் நகப்பொலிஷ் பூசும்போது நன்றாகப் படியும். கைகளுக்கு நகப்பொலிஷ் பூசிக்கொள்ளும்போது முதலில் **Nail Base** பூசிக் கொள்ளவேண்டும். இதற்கு **Natural colour Nail Varnish** பூசி சிறிது காயவிடவும். பின் மேலால் நகப்பொலிஷ் விரும்பிய நிறத்தில் பூசவும். இப்படி பூசும்போது முதலில் பட்டையாக நடுவில் பூசி, பின் இரு கரைகளிலும் பூசிக்கொள்ளவும். பூசும்போது நகத்தின் சருமங்களில் படாதவண்ணம் அழகாகப் பூசிக் கொள்ளவும். பட்டுவிட்டால் ஒரு குச்சியில் சிறு பஞ்சு சுத்தி நெயில்பொலிஷ் ரிமூவர் மூலம் துடைத்துக் கொள்ளவும். நகப்பொலிஷ் பூசிய பின்னரும் natural varnish மூலம் மேலால் seal பண்ணவும். இவ்வாறு பூசிக்கொள்ளும் நகப் பொலிஷ் விரைவில் கலையாமல் இருக்கும். இப்படி செய்து கொள்ளும் கைகள் மிகவும் அழகாகவும் ஆரோக்கியமாகவம் இருக்கும்.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.
-திருக்குறள்

## நமது நோக்கு

# அச்சம் சூழும் கடல்!

போாநிறுத்த ஒப்பந்தமும், புரிந்துணர்வு உடன்படிக்கையும் நடைமுறைக்கு வந்திருந்தும் - நெருக்கடிமிக்க, பிரச்சினைகள் தீராத பிராந்தியமாக, வடகிழக்குக் கடற்பகுதி தொடர்ந்து வருவதை - கடந்த செவ்வாயன்று வடமராட்சிக்கடலில் நடைபெற்ற சம்பவம் உணர்த்துகின்றது.

ஏற்கனவே - கடல் வலயத்தடைகளாலும், கெடுபிடிகளாலும் தமது அன்றாட சீவனோபாயத்திற்கே அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் அப்பாவிக் கடற்தொழிலாளர்கள் மீது கடற்படையினரின் தணியாத தாக்குதல்களின் தொடர்ச்சியாக செவ்வாயன்று நடந்த சம்பவம் அமைந்திருக்கின்றது.

உணர்வுதிறன் மிக்க ராடர் கருவிகள் பொருத்தப்பட்ட கடற்படையினரின் டோறா படகானது - கடற்தொழிலாளர்களின் மீன்பிடிப்படகு மீது மோதியதில் - அப்படகு க்குநூறானது - அப்படகிலிருந்த ஒருவர் காணாமற்போனதுடன், இருவர் காயங்களுக்குள் ாகினர். அதேவேளை, இன்னுமொரு சம்பவத்தில் மேலும் இரு கடற்தொழிலாளர்கள் காணாமற்போய் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

சமாதானத்தின் காற்று இன்னும் கடற்பகுதியைத் தழுவாததாக - பதற்றம் குறையாத, கெடுபிடிகள் நிறைந்த பகுதியாக வட - கிழக்குக் கடற்பகுதி இன்னமும் தொடர்ந்து வருவதை இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அதேவேளை, கிழக்கிலும் மூதூர்ப்பகுதியில் - கடற்படைப்படகு ஒன்று கடற்தொழிலாளர்களின் படகினை இதே பாணியில் மோதித்தாக்கியதில் - முஸ்லிம் கடற்தொழிலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முதலில் நடந்த மூதூர்ச்சம்பவத்தை தற்செயலான சம்பவமென்றும், தாம் வேண்டுமென்று மோதவில்லை எனவும் கடற்படையினர் கூறி, ஓரிரு நாட்கள் கடக்கு முன்னரேயே, வடமராட்சிக் கடலிலும் 'மோதல் சம்பவம்' நடைபெற்றுள்ளதை வைத்துப்பார்க்கும்போது கடற்படையின் நடவடிக்கைகள் திட்டமிட்டே செயற்படுத்தப்படுகின்றன என்பது தெளிவாகின்றது.

யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு முன் - கடலில் வைத்து கடற்தொழிலாளர்களை சகட்டுமேனிக்கு சுட்டும், காயப்படுத்தியும், கடற்கரைப்பிரதேசங்களை பீரங்கிக் குண்டுகளால் தகர்த்தும் வந்த மனோபாவம்- யுத்த நிறுத்தத்தின் பின்னர் தந்திரோபாயமான முறையில் ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் - கடற்தொழிலாளர்களைத் தாக்குவதும், உயிர்ப்பலி வாங்குவதும், படுகாயப்படுத்துவதுமென - அச்சுறுத்தல் போக்காகத் தொடர்வதையே காணமுடிகின்றது.

வட - கிழக்குக் கடற்பிராந்தியத்தில் கடந்த காலங்களில் நடந்த கொடூரங்களின் தொடர்ச்சியாக- கடற்படை இன்னமும் இத்தகைய, மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை, எவ்விதத்திலும் யாரும் நியாயப்படுத்தமுடியாது.

தடைகளாலும், ஏராளம் நிபந்தனைகளாலும் - கண்ணீரோடு தம் வாழ்வை நகர்த்திவரும் இலட்சக் கணக்கான அப்பாவிக் கடற்தொழிலாளர்களை - மனிதாபிமானமற்ற ரீதியில் தாக்குவதை மனிதநேயமுள்ளவர்கள் தட்டிக்கேட்க வேண்டும். கண்டிக்க வேண்டும். மேலும் இது தொடர்கதையாவதைத் தடுக்க வண்டும்.

கடற்தொழில் புரிபவர்களின் பொருளியல் வாழ் வைச் சிதைத்ததோடு மட்டுமல்லாது - அவர்களது வாழ்வினை உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் நசுக்கியும் வருவதோடு - இவ்வாறான நேரடித்தாக்குதல்கள் வழியாகவும்- ஈவுஇரக்கமற்ற அராஜகம் தொடர்வது உடன் தடுக்கப்படவேண்டும்.

ஒருபுறம் கடற்தொழில் கட்டுப்பாடுகளில் தளர்வு என அறிவித்துக்கொண்டு - மறுபுறம், அப்பாவி மக்களைக் குறிவைத்துத் தாக்குவது - போலித்தனமான இரட்டை வேடத்தின் வெளிப்பாடேயன்றி வேறல்ல.

வடமராட்சிக் கடலில் நடந்த தாக்குதலை சாதாரண விவகாரமெனக் கருதினால் - நாளை இன்னும் பல மீன்பிடிப் படகுகள் மோதுண்டு போவதும், மீனவர்கள் காணாமற் போவதும் அன்றாட நிகழ்வுகளாகிவிடும். கடற்தொழிலாளர்கள் கடலுக்குள் இறங்குவதே உயிர் அச்சுறுத்தலாகிவிடும்.

நேற்றும் இன்றும் வடமராட்சிப் பகுதியில் கடற்தொழிலாளர்களிடையே இந்த அச்சமும், பதற்றமும் மேலோங்கி நிற்பதைக் காணமுடிந்தது.

எனவே - அரசாங்கமும் போர்நிறுத்தக் கண் ாணிப்புக் குழுவினரும், மனிதநேய அமைப்புக்களும், இவ்விடயத்தில் உடனடிக் கவனம் எடுத்து - நடவடிக்கை எடுத்து, கடற்தொழிலாளர்களின் அச்சத்தைப் போக்குவதற்கு - பாதுகாப்பு உத்தரவாதமொன்றை உறுதியாகப் பெற்றுத்தரவேண்டும்.

கடற்தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கைக்கு தொடர்ந்தும் பாதிப்பு ஏற்படுத்தப்படுமாயின் - அது சமாதான முயற்சிகளின் அர்த்தத்தையே கேலிக்கூத் தாக்கிவிடும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

# அப்பாவி கடற்தொழிலாளரைக் கொல்லும் நோக்குடனேயே மோதல் நடத்தப்பட்டது!

## வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

2003ஆம் ஆண்டு சமாதானத்தை நிலைநிறுத்தும் ஆண்டாக எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில், சமாதான முயற்சியைக் குழப்பும் நோக்குடன் கடற்படையினரின் தாக்குதல் நடைபெற்றுள்ளது என நேற்று முன்தினம் தொண்டமானாறு கடலில் மீனவர் மீது நடாத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

முதற்கட்டமாக மூதூர்க் கடலிலும், பின் தொண்டமனாறிலும் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கிறது. இது தொடரலாம் என்று கடற்தொழிலாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர். இந்நிலையில் சமாதானம் மலருமா? என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

இத்தாக்குதலைக் கடற்படையினர் தாங்கள் செய்யவில்லை எனக்கூறுவது மிகவும் வேடிக்கையானது. டோறாப் படகில் பொருத்தப்பட்டுள்ள நவீன ரடார் சாதனங்கள் மிகத் துல்லியமாக, டோறாவுக்கு முன்னால் வரும் எந்தப் பொருளையும் காட்டக்கூடியன. அவ்வாறான நிலையில் - அப்பாவிக் கடற்தொழிலாளர்களைக் கொன்று குவிக்கும் எண்ணப்பாட்டுடன் ஈடுபடும் இத்தகைய நடவடிக்கைகள் மிகக் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியனவாகும்.

மேற்கொண்டும் இத்தகைய தாக்குதல்கள் தொடருமானால்- மீண்டும் கடற்தொழிலாளர்களாகிய நாம் ஒன்றிணைந்து பெரும் போராட்டங்கள் செய்வதைத் தவிர வேறு வழி எமக்குக் கிடையாது என, அக்கண்டன அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச,ரா)

# கலை, கலாசாரத்தை சீரழிக்கும் தென்னிந்தியத் திரைப்படங்கள்!

## திருமலையில் 'கடலோரக்காற்று' வெளியீட்டு விழாவில் சாடல்

(திருகோணமலை)

கலைபபடைப்புக்களைப் பெருமையுடன் செய்யக்கூடிய சூழ்நிலை போராட்டகாலத்தில் இருக்கவில்லை. நாம் திரைப்படததைத் தயாரிக்கவில்லை. எமது வாழ்க்கையைத் தயாரித்திருக்கின்றோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிதர்சனம் தொலைக்காட்சிப் பிரிவின் தொடர்பாளர் வீரா தெரிவித்தார்.

கடற்புலிகள் 10 ஆவது வருட நிறைவைக் குறிக்கும் முகமாகத் தயாரிக்கப்பட்ட கடலோரக்காற்றுத் திரைப்படதின் வெளியீட்டுவிழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்குத் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

வெளியீட்டுரையைத் தொடர்பாளர் வீரா நிகழ்த்தினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் தற்போது இத்திரைப்படம் வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

எமது வரலாற்றை எதிர்காலச் சந்ததியினரின் நலன்கருதி ஆவணப்படுத்த வேண்டிய பொறுப்பு எம் எல்லோரிடமும் உண்டு. அதன் ஓர் கட்டமாகவே கடலோர மக்கள் படும் அவஸ்தைகளை வெளியுலகுக்குக் காட்டுவ தற்காக இதனை நாம் தயாரித்துள்ளோம். வெறும் பணம் திரட்டுவதற்காக இதனை நாம் தயாரிக்கவில்லை.

மக்களின் வாழ்க்கை நிலையை ஆவணப்படுத்த வேண்டிய தேவை எம் எல்லோரிடமும் உண்டு.

மக்கள் இன்றி விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றதாகச் சரித்திரங்கள் இல்லை. மக்கள் எம்முன்னே வரவேண்டும். நீங்கள் கட்டளைகளை எமக்கு இடவேண்டும். அவற்றினை நாம் செய்து முடிக்கவேண்டும்.

எமது கலை கலாசாரத்தை சீரழிக்கும் நிலையில் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் இருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் போராட்டத்தை மையமாக வைத்துத் திரைப்படங்களைத் தயாரிக்க இந்தியாவில் இருந்து பல அழைப்புக்கள் எமது அரசியற்துறையூடாக வந்துள்ளன. எம்மை வைத்து பணம் சம்பாதிக்க அவர்கள் நினைக்கின்றார்கள்.

தென்னிந்திய திரைப்படங்கள் வளர்வதற்கு வேண்டிய நிதியை வழங்குபவர்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள்தான்.

எமது கலை கலாசாரப் பண்பாடு போற்றிப் பாதுகாக்கப்படுவதோடு, பேணிப்பாதுகாக்கப்படவும் வேண்டும்.

எமது போராட்டத்தை மையப்படுத்தி பல சிங்கள திரைப்படங்கள் தோற்றம் பெற்றுள்ளன. சிங்களவர்க ளுக்குச் சண்டை என்பது ஒரு சம்பவம். எமக்குச் சண்டை வாழ்க்கை ஆகும். வாழ்க்கைக்காக நாம் போராடிக்கொண்டி ருக்கின்றோம் என்றார்.

இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்த சட்டத்தரணி கா.சிவபாலன் உரையாற்றுகையில், போர் முடிந்த பின்னர் ஐக்கிய அமெரிக்கா,ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் தமது வீரர்களின் வீரதீரச் செயல்களைக் காட்டும் பல படங்களைத் தயாரித்து வெளியிட்டுள்ளன. அவைகள் போர் ஓய்ந்த பின்னர் வெளிவந்த படங்கள் ஆகும். ஆனால், கடலோரக்காற்று, போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஆகும் என்றார்.

திருகோணமலை மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டுத் துறைப் பொறுப்பாளர் தர்மன் வரவேற்புரையை ஆற்ற, வடக்கு, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி என்.சிறிதேவி மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

மாவீரர்களான ரொபின்சன், சாரங்கன் ஆகியோரின் தாயார் திருமதி மாரிமுத்து லட்சுமி பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.

மூதூர் பிராந்தியத் தளபதி மேஜர் கஜேந்திரனின் தாயார் திருமதி மங்களேஸ்வரி சிங்காரவேலு, கும்புறு பிட்டிப் பிரதேச இராணுவப் பொறுப்பாளர் ஈகனடமிருந்து முதற்பிரதியைப் பெற்று வெளியீட்டினை ஆரம்பித்து வைத்தார்.

கும்புறுப்பிட்டிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் சிவகுமார் நன்றியுரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து திரைப்படக்காட்சி பொதுமக்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

# வெளிக்கள உத்தியோகத்தர்கள் புனர்வாழ்வு, மீள்குடியமர்வுப் பணிகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் பலர், இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்களில் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் ஆகியோரே- இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து மேற்படி புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு ஆகியன தொடர்பான வேலைத்திட்டங்களில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

# சமஷ்டி முறைமைக்கு எதிராக கொழும்பில் கண்டனக் கூட்டம்

## 15 அமைப்புக்கள் சேர்ந்து நடாத்தத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் சமஷ்டித் தீர்வைக் காண்பது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து; 'தாய்நாட்டைப் பாதுகாக்கும் பிக்குகள் முன்னணி' என்ற அமைப்பு கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பில் இந்தக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. 15 அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் 'தாய்நாட்டைப் பாதுகாக்கும் பிக்குகள் முன்னணி', சமஷ்டிமுறை மூலம் அரசாங்கம் நாட்டைத் துண்டாட முயற்சி செய்வதாகக் குற்றஞ்சாட்டியுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

இக் கண்டனக் கூட்டத்திற்கான அழைப்புக்கள்- பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி, பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் மற்றும் சிங்கள பௌத்த அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக 'தாய்நாட்டைப் பாதுகாக்கும் பிக்குகள் முன்னணி' அறிவித்துள்ளது.

# ஒருவித இயந்திர வாழ்க்கை முறைக்குள் யாழ்ப்பாணச் சமூகம் தள்ளப்பட்டு விட்டது!

*சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் பல்வேறு துறைகளில் நீண்டகால அனுபவம் பெற்றவர். சட்டம், கலை, இலக்கியம், அரசியல், ஆன்மீகம், பத்திரிகைத்துறை எனப் பல பரிமாணமுடைய ஆளுமையுள்ள புலமையாளன். இத்துறைகள் சார்ந்த பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியமையால் மலேசியா, மொரீசியஸ், அவுஸ்திரேலியா, தமிழ்நாடு எனப் பல தேசங்களிலுமுள்ள பொது அமைப்புக்களா ல் பாராட்டப்பட்டு, விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். அவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்படப் பல உயர்கல்வி நிறுவனங்களில் சட்டவிரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். அவர் தமது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொள்கின்றார்.*

*கேள்வி:-* உங்களுடைய பத்திரிகை உலகப் பணிகள் பற்றிக் கூற முடியுமா?

*பதில்:-* எனது பத்திரிகைப் பணி என்பது - நான், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவனாகக் கல்விகற்கும்போதே ஆரம்பமாகிவிட்டது. அங்கு மாணவ சஞ்சிகையான "இளஞாயிறு" சஞ்சிகைக்கு நான் ஆசிரியராக இருந்தேன். அதேவேளையில், தற்போது தென்னிந்திய திருச்சபையின் பேராயராகவிருக்கும் வணக்கத்துக்குரிய கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் "உதயதாரகை" பத்திரிகையில் ஒவ்வொரு வாரமும் ஆக்கங்களை எழுத ஏற்பாடு செய்து தந்ததோடு- ஊக்கமும், ஆலோசனையும் தந்தார். இதன் பின்னர், நான் கொழும்புக்குப் பல்கலைக்கழகக்கல்வி பெறுவதற்காகச் சென்றேன். அங்கு எனக்குத் தந்தை செல்வாவினதும், அவரது குடும்ப உறுப்பினர்களதும் அறிமுகம் கிடைத்தது. இதனால் காலஞ்சென்ற, சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனின் தொடர்பு கிடைத்தமையால் "சுதந்திரன்", "சுடர்" போன்ற இதழ்களில் எழுதத் தொடங்கினேன். அதனால் ஈழவேந்தன், காசிஆனந்தன் போன்றவர்களது ஊக்கமும், ஒத்துழைப்பும் கிடைத்தன. இதன்பின் நான் யாழ்ப்பாணம் வந்தபோது "சிரித்திரன்" ஆசிரியர் சிவஞானசுந்தரம் (சுந்தர்) அவர்களது தொடர்பு கிடைத்தது. இரண்டு தசாப்த காலமாக அவரே என்னைப் புடம் போட்டு ஒரு பத்திரிகையாளனாக்கினார். இதேகாலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து சுதந்திரன் வெளிவந்தபோது, அதன் துணையாசிரியராக நியமிக்கப்பட்டேன். இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "சற்றடே றிவியூ" (Saturday Review) பத்திரிகையின் ஆசிரியர் சிவநாயகத்தின் தொடர்பு கிடைத்தது. அவர் பத்திரிகைத் துறை பற்றிய பல விடயங்களை எனக்குச் சொல்லித் தந்தார். இதன் பின் 1987ஆம் ஆண்டு "ஈழமுரசு" பத்திரிகையின் செய்தி ஆசிரியராக நியமனம் பெற்றேன். இக்காலகட்டத்தில் காக்கா அண்ணை, நண்பர் ராதேயன் போன்ற எழுத்தாள நண்பர்களது தொடர்பு கிடைத்தது. இதன் பின், இந்திய இராணுவம் ஈழத்தில் நிலைகொண்டிருந்தபோது, கவிஞர் மு.பொன்னம்பலம், அ.யேசுராசா, சு. வில்வரத்தினம், மு.திருநாவுக்கரசு போன்ற நண்பர்களது தொடர்பு காரணமாகத் "திசை" பத்திரிகையில் எழுதுகின்ற வாய்ப்புக் கிடைத்தது. இதன்பின் 1990ஆம் ஆண்டு "ஈழநாதம்" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது, வாரவெளியீட்டின் இணையாசிரியாக நியமிக்கப்பட்டேன். இக் காலகட்டத்தில் எனது நண்பர், எழுத்தாளர் சாந்தன் அவர்களது தொடர்பு கிடைத்தமையால் ஆக்க இலக்கியங்கள் பற்றிய பெருமளவு விடயங்களைத் தெரிந்து கொண்டேன். இதேகாலப்பகுதியில் நான் பல்கலைக்கழக விரிவுரையாளனாகச் சேர்ந்தபடியால் அங்குள்ள பெரியார்கள், விமர்சகர்களது தொடர்பு காரணமாகப் பல விடயங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. எனது தேடல் புலத்தை நான் விசாலித்ததோடு, ஆளுமையையும் விருத்திசெய்து கொண்டேன்.




*கேள்வி:-* நீங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஒரு சட்ட விரிவுரையாளனாகப் பணியாற்றி வருகின்றீர்கள். சட்டம் கற்பித்தலில் உங்கள் அனுபவங்களைக் கூறமுடியுமா?

*பதில்:-* ஆம், நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வேறு உயர் கல்வி நிறுவனங்களிலும், ஆரம்பத்தில் சட்டக்கல்வி கற்பித்தபோது, தமிழ்மொழி மூலமே கல்வி கற்கும் மாணவர்கள் இருந்தார்கள். ஒரு சிலரே ஆங்கிலத்தில் கல்வி பெற்றார்கள். சட்டநூல்கள், சட்ட அறிக்கைகள் தமிழில் போதியளவு இருக்கவில்லை எனலாம். நான் அவர்களுக்குக் கம்பனிச்சட்டம், வர்த்தகச் சட்டங்களைக் கற்பித்தபோது, போதியளவு உசாத்துணை நூல்கள் தமிழில் இல்லாமையால் மாணவர்களும், நானும் பல இடர்பாடுகளை எதிர்நோக்கினோம். விரிவுரைகளோடு, பல ஆங்கில சட்டநூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து றோணியோ பண்ணிக்கொடுத்தேன். இப்போது முகாமைத்துவபீடம் தனியாக இயங்குவதோடு, அங்கு கல்விகற்கும் சகல மாணவர்களும், ஆங்கில மொழியில் கல்வி கற்பதால், அவர்கள் வாசிக்கும், பரப்பெல்லையும், தேடல் முயற்சிகளும் விஸ்தாரம் பெற்றுள்ளன. கற்கவேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியுள்ளது. நிறைய வாசிக்கிறார்கள். பரீட்சைகளிலும் அதிக புள்ளிகளைப் பெறுகிறார்கள். பாரம்பரிய விரிவுரை முறைகளில் மாற்றம் செய்து தேடல் முயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தியுள்ளோம். இதனால் கல்வித்தாகம் மேற்கிளம்பியுள்ளது. உசாத்துணை நூல்களை ஆங்கில மொழியில் கற்கும் வாய்ப்புக்கிட்டியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடாதிபதி எம்.நடராஜசுந்தரத்தின் இந்த முயற்சிகள் பெரும் நன்மையைச் சமூகத்துக்குப் பகிர்ந்தளித்துள்ளன.

*கேள்வி:-* ஒரு சட்டத்தரணி என்ற முறையில் இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

*பதில்:-* இன்று, 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக சட்டமும், ஒழுங்கும் பெருமளவில் சீர்குலைந்து போய்விட்டது. சட்டத்தை மதிக்காமல், சட்டத்தை தமது கையில் எடுத்துக்கொண்டு தான்தோன்றித்தனமாக அடாவடித்தனங்களில் ஈடுபடுகின்ற குழுவாதம் மேலோங்கிவிட்டது. ஒரு முறை நீங்கள் நீதிமன்றத்துக்கு வந்து வழக்குகளைப் பார்வையிட்டால் இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தின் அகோரமான வெட்டுமுகத்தைத் தான் பார்க்கலாம். கசிப்பு உற்பத்தி, களவு, கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை எனக் குற்றவியல் குற்றங்கள் குவிந்து போயுள்ளன. பாடசாலைச் சிறுவர், சிறுமியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வீதிப்போக்குவரத்து ஒழுங்குகள் எதுவுமே கிடையாது. கண்டி வீதி திறக்கப்பட்டபின் வாகனங்கள் யாழ்ப்பாண வீதிகளில் சாகசங்கள் காட்டுகின்றன. எல்லாம் வியாபார மயமாக்கப்பட்டுவிட்டது. மனிதனுடைய மூளைக்கும் - அவனது இதயத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் போய், இன்று ஒருவகையான இயந்திர வாழ்க்கைக்கு யாழ்ப்பாணச் சமூகம் தள்ளப்பட்டுவிட்டது. தகவல் தொழில்நுட்பக்கல்வி, அறிவியலை வளர்ப்பதற்குப் பதிலாக ஆபாசப் படங்களைப் "பிரிண்டிங்" செய்யப் பழக்கியுள்ளது. தொற்றுநோய்கள் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. வெள்ளைப்பூரான் கடித்து எத்தனை பேர் வடமராட்சியில் இறந்தார்கள். தடுப்பு முயற்சியில் யாராவது ஈடுபட்டார்களா? தொற்றுநோய்கள் பற்றிய விழிப்புணர்வைச் சம்பந்தப்பட்ட யாரும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை. பல ஆயிரக்கணக்கில் மக்கள் அண்மைக்காலக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டார்கள். புதுடில்லியில் ஒரு குரங்கு மனிதன் உலாவியபோது ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வைப் பார்த்துப் பிரமித்துப் போனேன். அந்த விழிப்புணர்வே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவியது. இங்கு பல குற்றவியல் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாமல் பலரும் குழம்பிப் போய் இருக்கிறார்கள்.

*கேள்வி:-* குற்றச்செயல்கள் பெருகிப்போயுள்ளன எனக் குறிப்பிடும் நீங்கள் இதற்கு என்ன பரிகாரத்தைக் குறிப்பிடுகிறீர்கள்?

*பதில்:-* நான் எப்போதும் யதார்த்த நிலைமையைக் கருத்தில் எடுப்பவன். இன்று அல்லைப்பிட்டியில் கொள்ளையடித்தவர்கள் வன்னியில் போய் ஒளிந்திருக்கிறார்கள். இதேபோல் புதுக்குடியிருப்புப் பகுதியில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் குடாநாட்டுக்குள் வந்து ஒளித்துக் கொண்டு வாழ்கின்றார்கள். இன்றுள்ள நிலையில் - யாழ்ப்பாணப் பொலிஸாரும், வன்னிப்பிரதேச காவல்துறையினரும் இணைந்து ஒரு வேலைத் திட்டத்தை வகுத்து செயல்படுத்தினால்தான் குற்றவாளிகளைச் சட்டத்தின்பிடியில் கொண்டு வருவதோடு, பெருமளவு குற்றச்செயல்களை குறைக்கலாம் என்பது எனது கருத்து.

*கேள்வி:-* ஒரு அரசியல், விஞ்ஞான ஆய்வாளன் என்ற முறையில் சமகால அரசியல் நிலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:-* இன்றைய இந்தச் சமாதானச் சூழ்நிலை என்பது வானத்திலிருந்து இறங்கிவிடவில்லை. பெரும் தியாகத்தின் பின்னரே உருவானது. அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் உருவான புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்தம் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. ஆனால் மக்கள் வாழ்வில் இயல்புநிலை தோன்றவில்லை. நீங்கள் ஒரு முறை மருதனார்மடம் சபாபதி அகதிமுகாமுக்குப் போனால் இடம்பெயர்ந்த மக்களின் அவலவாழ்வைப் பார்க்கலாம். இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று தமது அன்றாட வாழ்க்கையை மீள ஆரம்பிக்கும் வரை குடாநாட்டில் இயல்புநிலை தோன்றமுடியாது. இயல்புநிலை தோன்றாவிட்டால் சமாதானமும் உருவாகமுடியாது.


பொன்.பூலோகசிங்கம்

இவையெல்லாம் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவையாகும். இது ஒரு அரசியல் பிரச்சினையல்ல. அப்பாவி மக்களின் வாழ்வுப்பிரச்சினை. இப்பிரச்சினையில் ஜனாதிபதி சந்திரிகாவின் சுத்த இராணுவக் கண்ணோட்டம் அருவருக்கத்தக்கது.

இட் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று இயல்பு வாழ்வை மேற்கொள்வதா? அல்லது இடம்பெயர்ந்த இடங்களிலேயே சீர்கெட்டு அழிந்துபோவதா? ஆனபடியால்தான் இப்பிரச்சினை வாழ்வுக்கும் - மரணத்துக்கும் இடையில் நடைபெறும் ஜீவமரணப் போராட்டம் என நாங்கள் குறிப்பிடுகின்றோம்.

இந்த யதார்த்த நிலையை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நேர்காணல்:
எஸ்.சாந்தகுமார்

# சிவ வழிபாடும் சிறப்பான வாழ்வும்

சைவநெறியானது அன்புநெறியாக இருப்பதோடு, வாழ்க்கை நெறியாகவும் இருக்கிறது.

அதனாலே சைவநெறி பேரின்ப நிலைபெற நமக்கு வழிகாட்டுவதோடு, இல்லற வாழ்க்கைக்கு நம்க்கு வழிகாட்டுவதாக இருப்பதை நாம் உணரவேண்டும்.



சைவநெறியின்படி ஒருவன் ஒழுகிவந்தால், இவ்வுலக வாழ்வை வெறுப்பதென்பதோ, துறப்பதென்பதோ வேண்டியதில்லை; அவ்வாறு வெறுத்துத் துறவியாகப் போனாலும் அதனால் அவன் நன்மையடைய மாட்டான் என்பது திருவள்ளுவரின் கருத்து ஆகும்.

மனம் இருப்பதனால் ஒருவன் மனிதனாகிறான். மனிதன் பகுத்தறிவு உள்ளவன். மனத்தின் துணை கொண்டு ஒருவன் சுவர்க்கத்தையும் காணலாம்; நரகத்தையும் காணலாம். மற்றவர்களால் ஒருவன் எதையும் அடைய முடியாது. "நன்றும் தீதும் பிறர்தர வாரா" என்பது ஆன்றோர் வாக்கு.

ஆகவே, அன்பு வழியிலே வாழ்வாரைக் கொண்டு இவ்வுலகம் உய்யவேண்டுமாயின், சிவவழிபாடு அவசியமாகும்.

சிவவழிபாடு சிறப்புற நடைபெற வேண்டுமாயின், வேதஆகமங்களிலே சொல்லப்பெற்ற யாகங்களும், கோயில் வழிபாடுகளும், அர்ச்சனைகளும் ஒழுங்காக நடைபெற வேண்டும்.

இந்த உண்மையைத் திருஞானசம்பந்த சுவாமிகள் "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

திருஞானசம்பந்தர் தலயாத்திரையை மேற்கொண்டிருந்த போது, சமணசமயத்தின் ஆதிக்கம் இருந்தமையால் அரசனும் சமண மதஞ் சார்ந்து ஒழுகவே "அரசனெவ்வழி குடிகளும் அவ்வழி"யாகவே சைவநெறி ஒளியிழந்து காணப்படுகின்றது.

சைவசமயத்தின் தாழ்வு நிலையைக் கருத்திற் கொண்டுதான், பட்டத்தரசியார், குலச்சிறையார் உதவியுடன் ஞானசம்பந்தக்குழந்தையை அந்நகருக்கு அழைக்கின்றார்.

திருஞானசம்பந்தரை இப்பொழுது முதன்முதலாகவே காண்கின்ற

ஆன்மீக அரங்கம்

பொழுது, மந்திரியாரும் மங்கையற்கரசியாரும் தமது எண்ணம் நிறைவேறியதாக ஆனந்தக்களிப்பில் மூழ்கியதாகச் சேக்கிழாரும் ஆனந்தமடைகின்றார்.

சிவன் அருளைப் பெறும் பொருட்டு வேத ஆகமங்களிலே சொல்லப்பெற்ற முறையாக யாகங்கள் செய்தல், கோவில் அமைத்தல், அர்ச்சனையும் வழிபடும் முறையும் அறியச் செய்தல் ஆகியவற்றிற்கு வேத ஆகம அறிவார்ந்த அந்தணர்கள் அவசியம் வேண்டப்படுவதால், அவர்கள் வளமான வாழ்வு வாழ வேண்டும் என்னும் பெருவிருப்பினால், "வாழ்க அந்தணர்" என்றே முதலில் ஆரம்பிக்கிறார்.

யாகங்களை ஏற்கவும் நல்லாசி வழங்கவும் உரியவர்கள் தேவர்கள் என்பதால் "வானவரை"யும், யாகத்திற்கும் பூசைக்கும் பஞ்சதிரவியங்களைத்தருவதால் "ஆனினங்களை"யும் வாழ்க என வாழ்த்துகிறார்.

மக்கள் வளமுடன் வாழ உலகம் செழிப்புற வேண்டும்; அதற்கு மழை அத்தியாவசியம் வேண்டப்படுவதால், "வீழ்க் தண்புனல்" என அடுத்துப் பாடுகிறார்.

இனி, மக்களை நல்வழிப்படுத்தி வாழ்வாங்கு வாழ வைக்கவும் நல்லோரைக் காத்து, தீயோரைத் தண்டித்து வழி நடாத்துவதற்கும் இயல்புடைய வேந்தன் அவசியம் என்பதால், "வேந்தனும் ஓங்குக" என்றார்.

"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே"

அந்தணரும் வானோரும் ஆனினமும் மழையும் மன்னனும் ஆகிய இவர்களெல்லாம் நன்கு அமைந்தவிடத்தும், சிவநெறிக்கு மாறான தீயவை நிகழக்கூடாது என்பதால், "ஆழ்க தீயதெல்லாம்"என்று பாடுகிறார் ஞானசம்பந்தர்.

"நற்றுணையாவது நமச்சிவாயவே" ஆதலால், எங்கும் சிவமயமாகவே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, "அரன் நாமமே சூழ்க" எனப் பாடுகின்றார்.

இவ்வாறு இருக்கும் பொழுது, உலகம் எவ்வித இடையூறுமின்றி நடைபெறும்; மக்கள் இகபரசுரங்களைப் பெற்று, துயரம் நீங்கி வாழவேண்டும் என்னும் கருணையினால், "வையகமும் துயர் தீர்க்கவே" என்று திருவாய் மலர்ந்தருளினார் திருஞானசம்பந்தர்.

இவ்விதமாக, சைவநெறியை, சிவநெறியைக் கைக்கொள்ளுவோர் அறிய வேண்டிய முக்கிய செயற்பாடுகளை முதலாவது பாடலிலே சொல்லி, அவற்றின் விரிவாக்கமாக ஏனைய பாடல்களைச் சொல்லிப் பதிகத்தை நிறைவு செய்கின்றார் திருஞானசம்பந்த சுவாமிகள்.

நா.நல்லதம்பி

# புது வருடம் உங்களுக்கு எப்படி?

## 2003ம் ஆண்டின் கிரக மாற்றங்கள்

| | |
|---|---|
| சனீஸ்வரன் - | இடபராசியில் நிற்கும் சனீஸ்வரன் 22.05.2003 இல் மிதுன ராசிக்கு செல்கின்றார். |
| குரு - | கர்க்கடக ராசியில் நிற்கும் பகவான் 23.07.2003இல் சிங்கராசிக்கு மாறுகின்றார். |
| ராகு -கேது - | இடபராசியில் ராகுவும் விருச்சிக ராசியில் கேதுவும் நிற்கின்றனர். 14.08.2003இல் ராகு மேடராசிக்கும் கேது துலாராசிக்கும் மாற்றமடைகின்றனர். |



### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

இவர்களுக்கு ஏழரைச் சனி கடைக்கூறு நடைபெறுகின்றது. வாகனம்,பூமி போன்றன வந்து சேரும். தானதருமம் செய்தல் குடும்பச் சிறப்பு உண்டு. 22.05.2003 இல் ஏழரைச் சனி முடிகின்றது. இக்காலத்தில் விவாகம் ஆகாதவர்களுக்கு நன்மையைக் கொடுக்கும். 23.07.2003 இல் வியாழ பகவான் ஐந்தாம் இடத்திற்கு வர- தொழில் சிறப்பு, வாகன யோகம், மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பு, பெண்களுக்கு குடுமபத்தில் மங்களகரமான நிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றகரமான காலமாக அமையும்.

### இடபம்



கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.

இடப ராசிக்காரர்களுக்கு வியாழ பகவான் மூன்றாம் இடத்தில் நிற்பதும், ஏழரைச் சனி நடுக்கூறு நடைபெறுவதும்- பொதுவாக எந்த விடயத்திலும் தாமத்தையும், யோசனையையும், அடிக்கடி உடல் நிலை பாதிக்கப்படுவதும், எடுத்த காரியம் முற்றுப்பெறாது இழுபடுவதுமாக இருக்கும். சனி மாற்றத்தின் பின் நிலைமை சிறிது சீரடையும். வியாழ மாற்றத்தின் பின் நல்ல முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த மந்த நிலை சீரடையும். வியாபாரிகளுக்கும் ஓரளவு நன்மை யைக்கொடுக்கும். ஆடிக்கு மேல் திருமண வயதிலிருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும்.



### மிதுனம்

மிருகசீரிடம் 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

வருஷ ஆரம்பத்தில் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வெளியூரிலிருந்து பொருள் வரவுகள் உண்டு. விருந்தாளிகள் வருவார்கள். தொழில் முன்னேற்றம் உண்டு. வருஷப் பிற்பகுதியில் வழக்குகள், சிறை இருத்தல், பொருள் இழப்பு, மனவேதனை, அதிக அலைச்சலையும் கொடுக்கும். வருஷ பிற்பகுதியில் வெளியூர்ப் பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது.

### கர்க்கடகம்



புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

ஆடி வரை ஜன்மத்து வியாழன் நடைபெறுவது உடல் நிலையில் அடிக்கடி பாதிப்புக்களைக் கொடுக்கும். சளி, காய்ச்சல் போன்றனவும் தலையிடியையும் கொடுக்கும். தொழில் செய்யுமிடத்தில் விரோதிகளால் தொல்லைகள் உண்டு. வைகாசிக்கு மேல் ஏழரைச்சனி தொடங்குகின்றது. ஆடிக்கு மேல் வியாழ பகவான் இரண்டாமிடத்திற்கு வர இதுவரை இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும். வருஷ பிற்பகுதி நன்மைக்குரிய காலமாக அமையும். தொழில் ஸ்தானத்தில் இருந்து வந்த தடைகள் நீங்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் உண்டு.



### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்

கையில் பணம் இருக்காது. எவ்வளவு வந்தாலும் ஏதோ ஒரு வழியில் கையைவிட்டுப் போகும். வெளியூர்ப் பிரயாணங்கள் உண்டு. வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக முதலீட்டைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு மத்திமமான பலனே கிடைக்கும். ஞாபக மறதியைக் கொடுக்கும். ஆடிக்கு மேல் ஜன்மத்து வியாழன் தொடங்க உடல்நிலையும் பாதிப்படையும், தொழில் நஷ்டம், மனக்கவலையைக் கொடுக்கும்.

### கன்னி



உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்

பொருள்வரவு, குடும்பத்தில் சுபகாரியம் நடத்தல், வாகனம், வியாபாரம் இவற்றில்நல்ல இலாபம். மகிழ்ச்சி, விருந்தாளிகள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம், நல்ல பெறுபேறுகளை எதிர்பார்க்கலாம். பெண்கள் நன்மையடைவர். நகை, புடைவை போன்ற ஆடம்பரப் பொருட்கள் வந்துசேரும். திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் நடக்கும். பொதுவாக இந்த ஆண்டு நன்மையான ஆண்டாகும்.



### துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்

வைகாசி வரை அட்டமத்துச் சனி நடப்பது. நெஞ்சில் சளி இருக்கும். வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படலாம் பிறரால் ஏமாற்றப்படுவீர்கள். வருஷ பிற்பகுதியில் நல்ல பலன்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றத்தையும் தொழில் ஸ்தானத்தில் நல்ல மதிப்பும் முன்னேற்றமும் உண்டு. திருமணத்திற்காகக் காத்திருக்கும் பெண்களுக்கு இந்த ஆண்டு திருமணம் நடக்கும்.

### விருச்சிகம்



விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை

வருஷ ஆரம்பத்தில் தொழில் முன்னேற்றங்களையும் பிரயாணத்தால் நன்மை, மாணவர்களுக்கு உற்சாகமான காலமாக இருக்கும் வைகாசிக்கு மேல் அட்டமத்துச் சனி தொடங்க ஆடிக்கு மேல் வியாழ பகவான் பத்தாமிடத்திற்கு வர சளி, காய்ச்சல், இரத்தக்காயம், சிறைப் பயம், அலைச்சலுக்குரிய இடமாற்றம் போன்றவற்றைக் கொடுக்கும். அவமானப்படவும் ஏமாற்றப்படவும் கூடும். வீண்பழி சுமத்தப்படுவீர்கள். அவதானமாக இருந்தால் தவிர்க்கலாம்.



### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

ஆடி வரை அட்டமத்து வியாழன் நடப்பது- உடல்நிலை பாதிக்கப்படும், நிம்மதி இருக்காது, தொழில் துறையில் பிரச்சினைகள் இருக்கும. மாணவர்கள் கல்வியில் மந்த நிலை இருக்கும். ஆடிக்கு மேல் நிலைமை சீரடையும். வருஷ பிற்பகுதியில் நன்மைகள் உண்டாகும். நோய், கடன் தொலலைகள் நீங்கும். பொருள்வரும், தொழில் முன்னேற்றம் உண்டாகும மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெண்களுக்கு நன்மையுண்டு.

### மகரம்



உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்

வருஷ முற்பகுதி நன்மைகளைக் கொடுக்கும். வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றமுண்டு. குடும்பத்தில சுபகாரியம் நடக்கும். மாணவர்களுக்கு நல்ல பெறுபேறு கிடைக்கும். ஆடிக்கு மேல் அட்டமத்து வியாழன் தொடங்குவது காலில் காயங்களைக் கொடுக்கும். வயிற்றுவலி, நெஞ்சுவலி போன்றன இருக்கும். தொழில் ஸ்தானத்தில் அவதானம் தேவை. வீண்பழி, ஏமாற்றம் போன்றவற்றைக் கொடுக்கும்.



### கும்பம்

அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

வருஷ முற்பகுதியில் உடலில் நோயின் தாக்கம் அதிகம் இருக்கும். குடும்பத்தவருடன் மனக்கசப்பையும் விரோதத்தையும் உண்டாக்கும். மனநிம்மதி இருக்காது. ஆடிக்கு மேல் வியாழ சுகமுண்டு. தேகசுகம் இருக்கும். சச்சரவுகள் நீங்கி நிம்மதி கிடைக்கும். விவாக முயற்சி வெற்றியளிக்கும் மாணவர்கள் நன்மையடைவார்கள். பெண்களுக்குப் பொருள் சேரும்.

### மீனம்



பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி

வெளிநாட்டு வாய்ப்பு உண்டு. பொருள் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் முன்னேற்றமுண்டு. வியாபாரிகளுக்கு முன்னேற்றமான காலம். ஆடிக்கு மேல் வியாழன் ஆறாமிடத்திற்கு வர, தேகசுகம் பாதிக்கப்படும். அடிக்கடி நோய் வாய்ப்படுவீர்கள். எல்லாவற்றிற்கும் ஆத்திரப்படுவீர்கள். மனதில் நிம்மதி இருக்காது. அயல வருடன் பகைக்க நேரிடும்.

**பிரபல சோதிடர் எஸ். குகநேசன்**

# யாழ்.குடாநாட்டில் பரவும் காய்ச்சல்; தடுப்பதற்கு காப்பு நடவடிக்கைகள்!



தற்போது, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் 60 சதவீதமானோர் காய்ச்சல் நோயாளியாக உள்ளார்கள். இவர்களில் 65 சதவீதமானோர் இனம் காணப்படாத வைரஸ் காய்ச்சலினால் பீடித்துள்ளனர். 15 சதவீதமானோர் நெருப்புக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இனம் காணப்படாத வைரஸ் காய்ச்சலினால் கூடுதலான இளம் வயதினர், அதிலும் பெண்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர் என அவதானிகப்பட்டுள்ளது.

விழிப்புணர்வுடன், பின்வரும் நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து மேற்படி காய்ச்சல்கள் தனக்குத் தொற்றுவதைத் தவிர்த்துக் கொள்வதுடன் தம்மையும் பாதுகாத்துக் கொள்வோம்.

### வைரஸ் காய்ச்சல்

இக்காய்ச்சல் சுவாசத் தொற்று மூலம் தொற்றுவதாகக் கருதப்படுகிறது. எனவே வீட்டில் காய்ச்சல் உள்ளவர்களை தனிமைப் படுத்தல் வேண்டும்.

சன நெருக்கம் கூடும் இடங்களுக்கு அவசியமற்றுச் செல்வதைத் "தவிர்த்துக் கொள்ளல் நன்று.

காய்ச்சல் ஏற்பட்டால், ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்க அண்மையிலுள்ள அரச வைத்தியசாலைக்குச்சென்று பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

மருந்தினால் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

### டெங்கு காய்ச்சல்

டெங்கு காய்ச்சலும் வைரஸினால் ஏற்படுகின்றது. இக் காய்ச்சல் ஒரு தீவிர காய்ச்சலாகும்.

யாழ். மாவட்டத்தில் டெங்குவைப் பரப்பும் நுளம்பு இனம் காணப்படுகின்றமையால் டெங்கு நோயாளிகளிலிருந்து டெங்கு காய்ச்சல் நுளம்புக்கடி மூலம் பரவுகின்ற நிலை உண்டு.

நுளம்பு பெருகும் இடங்களை இல்லாது அழித்தல் வேண்டும்.

1. வீசப்பட்ட சிறு கொள்கலங்களில் தேங்கும் நீர்.
2. எறியப்பட்ட பொலித்தீன் பைகள்.
3. வீசப்பட்ட ரயர்கள்.

கழிவு நீர் வடிகால்கள், நீர் சேகரிக்கும் திறந்த கொள்கலங்கள் நீர்த்தாங்கிகள் ஆகியவற்றை ஐந்து நாட்களுக்கு ஒரு முறையாவது முழுமையாக வெளியேற்றி சுத்தம் செய்யவேண்டும்.

பீலிகளில் நீர், சருகுகள், தேங்கி நிற்பதை இல்லாது சுத்தப்படுத்த வேண்டும்.

நுளம்புக்கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு தங்கி நிற்கக் கூடிய பற்றைகள், புல் செடிகளை அழித்தல், அத்துடன் புகையூட்டல், நுளம்பு வலை, நுளம்புச்சுருள், புல் எண்ணை பாவித்தல் மூலம் தடுக்கலாம்.

டெங்கு காய்ச்சல் எனக் கருதப்பட்டால் காய்ச்சல் நின்ற பின்னர் சில நாட்களுக்கு தொடர்ந்து பூரண ஓய்வும், ஆபத்தான பின் விளைவிற்காக கண்காணிப்புக்களும் தேவை.

**தற்போது யாழ். குடாநாட்டில் பரவுகின்ற காய்ச்சல் தொடர்பாக, யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளரின் ஆலோசனைகள்.**

### நெருப்புக் காய்ச்சல்

தற்பொழுது பரவும் நெருப்புக் காய்ச்சல் இதுவரை பாவிக்கப்பட்ட மருந்துகளுக்கு கட்டுப்படாத நிலை ஏற்பட்டுள்ளது.

நெருப்புக்காய்ச்சல் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் அவசியமாகும்.

✦ தற்போதைய மழை வெள்ளம் காரணமாக நீர் நிலைகள் மாசடைந்து காணப்படுவதனால் கொதித்தாறிய நீரையே பருகுங்கள்.

✦ கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வீட்டில் சமைத்த உணவுகளை மட்டும் உண்ணுங்கள்.

✦ வெளியிடங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ள உணவு வகைகளையும் உண்ணாமல் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

✦ பழங்களை உண்ண முன்னர் பாதுகாப்பான நீரில் நன்றாகக் கழுவி உண்ணுங்கள்.

✦ கீரை வகைகள், காய்கறி, கடை உணவு உட்பட ஏனைய உணவுகளையும் நன்றாக சமைத்து உண்ணுங்கள்.

✦ பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு கொண்டு செல்வதற்கு வீட்டில் இருந்தே கொதித்தாறிய நீர், உணவுகளைக் கொடுத்துவிடுங்கள்.

✦ மலசலங்கழிப்பதற்கு எப்போதும் மலசல கூடத்தையே பாவியுங்கள். அத்துடன் மலசல கூடம் எப்பொழுதும் சுகாதாரமான நிலையில் வைத்திருக்க வேண்டும்.

✦ மலங்கழித்த பின்பும், உணவு உண்ண முன்பும்; சமைக்கமுன்பும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக் கழுவுங்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புதுவருட நாடாளுமன்ற அங்குரார்ப்பணம்!
# எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்திற்குத் திட்டம்

(கொழும்பு)

இவ்வருடத்துக்கான முதலாவது நாடாளுமன்றக்கூட்டம் நடைபெறவுள்ள எதிர்வரும் 7ஆம் திகதி, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்துவதற்கு எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

நோர்வே அரசாங்கம் புலிகளுக்கு சக்தி வாய்ந்த வானொலி உபகரணங்களை வழங்கியமை மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாடு என்பனவற்றைக் கண்டித்தே எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளன.

இதேவேளை, நோர்வே அரசு புலிகளுக்கு வானொலி உபகரணங்களை வழங்கியமை தொடர்பாக, நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வே தூதரகம் நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு, என்பனவற்றுக்கு மாறாகச் செயற்பட்டுள்ளது. ஆகவே, இவ்விடயத்தை நாடாளுமன்றத்தில் விரிவாக ஆராயவேண்டும். இதற்காகவே முழுநாள் விவாதமொன்றை நடத்தக் கோரவுள்ளதாக, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## யாழ். பிரதேச செயலர் பிரிவில்
# 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பதிவுகள் இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் பதினையாயிரம் ரூபா கொடுப்பனவுக்கான பதிவுகள், கிராம சேவையாளர் பிரிவுகளில் பின்வரும் திகதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இதன்படி இன்று- நாவாந்துறை தெற்கு, நாவாந்துறை வடக்கு, சுண்டுக்குளி வடக்கு, அத்தியடி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும், திங்கட்கிழமை- கோட்டை, கொட்டடி, யாழ்.நகர் மேற்கு, யாழ். நகர் கிழக்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளிலும், செவ்வாய்க்கிழமை- வண்ணார்பண்ணை, சோனகதெரு வடக்கு, சோனகதெரு தெற்கு, சிறாம்பியடி, பெரியகடை, புதிய சோனகதெரு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும், வியாழக்கிழமை- ஈச்சமோட்டை, நெடுங்குளம், கொழும்புத்துறை கிழக்கு, கொழும்புத்துறை மேற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளிலும் பதினையாயிரம் ரூபா கொடுப்பனவுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளில், கண்டி வீதியால் (A-9) வந்து மீளக்குடியமர்ந்துள்ள மக்கள், தமக்கு ஒதுக்கப்பட்ட திகதிகளில் பங்கீட்டு அட்டை, வங்கிப் புத்தகம் ஆகியவற்றை எடுத்துச் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## முக்கிய செய்திகள்

### புலிகளின் குரல் தமிழகத்திலும் கேட்கும்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பு இந்தியாவரை கேட்கக் கூடியளவுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளதாக 'அசோசியேட்டட் பிறஸ்' செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் குரல் வானொலியின் ஒலிபரப்பு நேரத்தையும், அது கேட்கக்கூடிய தூரத்தின் அளவையும் எதிர்வரும் 16 ஆம்திகதி முதல் அதிகரிக்கவுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

### காயமுற்ற மீனவர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்தொழிலுக்குச் சென்ற மீன்பிடிப் படகுகளுடன் கடற்படையின் டோறாப் படகு மோதியதனால் படுகாயமடைந்து, பலாலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இரு மீனவர்களும், இன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

பலாலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மேற்படி மீனவர்களை, இன்று இராணுவத்தினர் கடற்படையிடம் கையளிப்பார்கள். பின்னர், கடற்படையினர் இவர்களை யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிப்பார்கள் எனத் தெரியவருகின்றது.

### பொலிஸ்காரருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

மேலதிகமான துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேலதிகமான துப்பாக்கி ரவைகளை வைத்திருந்ததாக வசந்த என்ற பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்த கோப்பாய் பொலிஸார், நேற்றுமாலை யாழ். நீதிவான் முன் அவரை நிறுத்தினர்.

இவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அப்போது யாழ்.நீதிவான் விக்னராஜா உத்தரவிட்டார்.

(லி)

### நெல்லியடி சம்பவம் பொலிஸ் அதிகாரிகள் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் கடந்த மாதம் பொதுமக்கள் மீது பொலிஸார் நடாத்திய தாக்குதல் சம்பவம் குறித்து, யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.எம். பிரேமரத்ன பொலிஸ் அத்தியட்சகர் தர்மசேன, ஆகியோர் நேற்றுக்காலை 11 மணியளவில் மனித உரிமைகள்ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி றொசான் சந்திரசேகரா முன்னிலையில் தமது வாக்குமூலங்களை அளித்தனர்.

### ஞாயிறன்று..

லாந்து செல்லும்.

அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுககளில் நோர்வே தூதுவர் ஜோன வெஸ்பேர்க்கும் கலந்து கொள்வார் எனத் தெரியவருகின்றது.

### காணாமற்போன...

ஈடுபட்டவர்களைக் கடற்படையினர் அனுமதிக்காததை அடுத்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டிருந்தனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி, படை அதிகாரியுடன் நடாத்திய பேச்சுக்களை அடுத்துத் தேடுதல் நடத்த அனுமதிக்கப்பட்டதாக உறவினர்களுக்கு அறிவிக்கபட்டது.

இதனை அடுத்து, அந்தப்பிரதேச கடற்தொழிலாளர்கள் எட்டு வள்ளங்களில் காங்கேசன்துறைக் கடற்பரப்பை அண்டிய பகுதியில் தேடும் முயற்சியில் ஈடுபட்டவேளை, அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அதற்குத் தடை விதித்துள்ளனர். இதனால், தேடும் முயற்சியைக் கைவிட்டு மீனவர்கள் கரைதிரும்பினர். இதேவேளை-

செவ்வாயன்று பொலிகண்டி மேற்கிலிருந்து தொழிலுக்குச் சென்றவேளை காணாமற்போன இருவரும் நேற்று மதியம் வீடு திரும்பியுள்ளனர். (116,ச,கி)

மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணி புரியும், விசாக நட்சத்திரம், 1972 ல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை.

சாதகக் குறிப்பு, புகைப்படங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

ப. கிருஷ்ணமூர்த்தி
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
போன்: – 2789
(084)

நாளை ஆரம்பம்
A/L 2005
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
காலை - 8.00 மணி
DMI
யாழ். நகர்
(ச-415)

### முஸ்லிம்களுக்கு தனியான பிரதிநிதித்துவம்

(நமது நிருபர்)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கு தனியான பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிரதமர் ரணிலுடன் நடந்த தனிப்பட்ட சந்திப்பிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தெல்லிப்பளை...

ருக்கும் இப்போராட்டம் சாதகமான பதில் கிடைக்கும்வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இப்போராட்டம் தொடர்பாக விளக்கமளித்தும், மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கும்படி கோரியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றும் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

(க,லி)

### ஆயுதம்...

பீடாதிபதிகளிடம் எடுத்துக் கூறியதாகவும் அவர் சொன்னார். அதேவேளை, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்காமல் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்த முடியாது என்று தெரிவித்த ராணுவத்தளபதி, புலிகள் ஆயுதங்களை ராணுவத்திடம் கையளிக்க வேண்டிய அவசியமில்லை. மூன்றாம் தரப்பு ஒன்றிடம் ஆயுதங்களை கையளிக்க முடியும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

(200)

எல்லோருக்கும்
எமது இதய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்!

MURTHY
ADVERTISING SERVICES
2789

யாழ். F.M. இல்
விளம்பரம் செய்திட,
யாழ். - கொழும்பு
பிரயாண ஒழுங்கு
செய்திட,
நாள் வாடகைக்கு
ஆட்டோ அமர்த்திட
(084)

மூர்த்தி
விளம்பர சேவை,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
போன்: 2 7 8 9

# ஜே.வி.பியுடனான சந்திப்பை சந்திரிகா திடீரென ஒத்திவைப்பு

ஐ.தே.மு. அரசாங்கத்துக்கு எதிராக கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக நேற்றுமாலை நடைபெறவிருந்த முக்கிய கூட்டம் ஜனாதிபதியால் ரத்துச்செய்யப்பட்டது.

நேற்றுமாலை 5 மணியளவில் ஜே.வி.பி. தலைவர்களுடன் கூட்டணி குறித்துப் பேச்சு நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் மாலையில் திடீரென ஜனாதிபதி சந்திரிகா, தான் அமைச்சரவைக் கூட்டத்துக்குச்செல்லவுள்ளதாகக் கூறி இந்தச் சந்திப்பை ரத்துச்செய்தார்.

ஆனால், ஜனாதிபதி நேற்று மாலை நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவருகின்றது.

# ஒயில் ஊற்றி எரிக்கப்பட்டு சடலமாக இளம் பெண் மீட்பு

(வவுனியா)

மன்னார் பகுதியில் கடந்த 24ம் திகதி காணாமற்போன பெண் ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

காட்டுப்பகுதியில் விறகு எடுக்கச் சென்றவர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே இவரது சடலம் மீட்கப்பட்டது. சடலத்தின் மேல் ஒயில் ஊற்றப்பட்டு எரிக்கப்பட்டிருக்கின்றது.

மன்னார் செக்கட்டிப்புலவு என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது. சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### குடாநாட்டுக்கு..

பாதிப்பும் ஏற்படுவது ஐரோப்பாவில் அதிகமாக அவதானிக்கப்படுகிறது. எனவே இவ்வைரஸ் காய்ச்சல் அங்கிருந்து வந்து செல்பவர்களின் மூலமாகவே, யாழ்ப்பாணத்திலும் பரவுவதற்கு அதிகம் சாத்தியம் இருப்பதாக யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மனித உடலில் மூன்று வகையாக- வைரஸ் கிருமியின் தாக்கம் ஏற்படும். சுவாசத்தொகுதி, உணவுக் கால்வாய்த்தொகுதி, நரம்புத் தொகுதி ஆகியவற்றில் தொற்று ஏற்பட்டு பெரும்பாதிப்பை உருவாக்கும். எனினும், இதற்கு தடுப்பு மருந்துகள் பாவிப்பது என்பது உடனடியாகச் சாத்தியம் இல்லை என்றும், இதற்காகப் புதிது புதிதாக தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும் என்றும், அது- யாழ்ப்பாணத்துக்கோ அல்லது எமது நாட்டுக்கோ சாத்தியமற்ற விடயம் என்றும் மருத்துவப் பேராசிரியர்கள் மேலும் தெரிவித்தனர். (க,லி)

### பிரபா...

அத்துடன் வெளியிடங்களில் இருந்து வரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களும் இந்நாட்காட்டிகளை விரும்பி வாங்குவதுடன் உருவப்படங்களையும் வாங்கிச் செல்வதைக் காணமுடிகின்றது. (கி,ச)

### ஊடக...

தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என இராணுவ உயர் பீடத்தைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஊடகங்கள் வழியாகப் புலிகளுக்கு இரகசியங்களைக் கொடுப்பதை நிறுத்தி விடுமாறும் பிரதமர் இராணுவ உயர்பீடத்துக்கு வலியுறுத்தினார்.

இச்சந்திப்பில் உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை, இராணுவத்தின் திட்டவரைபை புலிகள் நிராகரித்தமை உட்படப் பல விடயங்கள் ஆராயப்பட்டன.

சிங்கப்பூருக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் நேற்றுக்காலையே நாடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பணிநிலை வெற்றிடம்

நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

கணக்காளர் | மேலாளர் | கணக்காய்வாளர்

பயிற்சிக்காலச் சம்பளம் 6500/=

தகைமைகள்:
1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமானி அல்லது தொழில் நிர்வாகமானிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது
2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

பொருத்தமானவர்கள் 05.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ். மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்க அலுவலகத்திற்கு வேண்டுகைகளுடன் சமூகம் தரவும்.

குறிப்பு:
09.12.2002ல் நடைபெற்ற நேர் முகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு பணியமர்த்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 16.01.2003 மதியம் 12.00 மணிக்கு முன்பாக ஆயப்பகுதி நடுவப் பணியகம், கிளிநொச்சிக்கு சமூகம் தரவும்

நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.